மேல்நிலை முதலாம் ஆண்டு

# பொதுத்தமிழ் - சிறப்புக் கையேடு

கிருஷ்ணகிரி மாவட்டம்

**2024 - 2025**

தலைமை

## திருமதி. க.பெ.மகேஸ்வரி

### இணை இயக்குநர் - சென்னை

## திரு.அ.முனிராஜ்

### முதன்மைக் கல்வி அலுவலர் - கிருஷ்ணகிரி மாவட்டம்.

**ஒருங்கிணைப்பாளர்கள்**

திரு. நா. ராஜன்  - மாவட்டக் கல்வி அலுவலர் , கிருஷ்ணகிரி மாவட்டம்.

திருமதி. வி. இரமாவதி. -  மாவட்டக் கல்வி அலுவலர், ஓசூர் - கிருஷ்ணகிரி மாவட்டம்.

முனைவர்.மு.வெங்கடேசன்-  சி.இ.ஓ. நேர்முக உதவியாளர்.(மே.நி.க) கிருஷ்ணகிரி.

திரு.எஸ்.வடிவேலு - உதவி திட்ட அலுவலர்,(சி.  இ.  ஓ) கிருஷ்ணகிரி.

முனைவர்.பொ.ஜே.முரளி - தலைமை ஆசிரியர், அ.மே.நி.பள்ளி பாரூர்.

திரு.அ.சீனிவாசன் - தலைமை ஆசிரியர், அ.மே.நி.பள்ளி, இராமாபுரம்.

திரு. எஸ். ஜான்பாக்கியம்  ந .ந. நி. பள்ளி ,இராஜு தெரு, கிருஷ்ணகிரி

**பாட ஆசிரியர்கள் குழு**

திருமதி.தே.தீபாராணி - அ.ம.மே.நி.பள்ளி, ஊத்தங்கரை.

திருமதி.பெ.கோமதி -  அ.மே.நி.பள்ளி, மேகலசின்னம்பள்ளி.

திரு.மு.சிவா - அ.ம.மே.நி.பள்ளி, பர்கூர்.

திரு.மு.நெடுஞ்செழியன் - அ.ஆ.மே.நி.பள்ளி, காவேரிப்பட்டிணம்.

திரு.த.நாராயணன் - அ.ஆ.மே.நி.பள்ளி, கிருஷ்ணகிரி.

திரு.மு.செந்தில் - அ.மே.நி.பள்ளி, அகரம்.

திரு.ம.சுப்பிரமணி – அ. ம.மே.நி.பள்ளி, நாகரசம்பட்டி.

திருமதி.ச.கவிதா - அ.ம.மே.நி.பள்ளி, கிருஷ்ணகிரி.

திரு. ப .இராஜேந்திரன் – அ. மே. நி. பள்ளி, இராமாபுரம்.

திருமதி.கா.கதிரொளி அ. மே. நி. பள்ளி, பாரூர்.

# பாடம் - தமிழ்

## பொருளடக்கம்


1.ஒரு மதிப்பெண் வினா -விடைகள்.

2. மொழிப்பயிற்சி (அனைத்து இயல்களும்)

3. அணி.

4. திணை, துறை.

5. இலக்கிய நயம் பாராட்டல்.

6. இலக்கணக்குறிப்பு.

7.பகுபத உறுப்பிலக்கணம்.

8.புணர்ச்சி விதி.

9.தமிழாக்கம் தருக.

10.பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக

11.குறுவினாக்கள்.

12.சிறு வினாக்கள்.

13.நெடு வினாக்கள்.

# பதினொன்றாம் வகுப்பு
# தமிழ்

## பலவுள் தெரிக:

**1."கபாடபுரங்களைக் காவு கொண்ட பின்னும் காலத்தால் சாகாத தொல் கனிமங்கள்" - அடி மோனையைத் தெரிவு செய்க.**

அ)கபாடபுரங்களை - காவுகொண்ட ஆ)காலத்தால் - கனிமங்கள்

**இ)கபாடபுரங்களை - காலத்தால்** ஈ)காலத்தால் - சாகாத

**விடை: இ**

**2.பொருத்தமானவற்றைத் தேர்ந்தெடுக்க.**

அ)முத்துலிங்கம் - யுகத்தின் பாடல் **ஆ)பவணந்தி முனிவர் - நன்னூல்**

இ)சு.வில்வரத்தினம் - ஆறாம்திணை **ஈ)இந்திரன்- பேச்சுமொழியும் கவிதைமொழியும்**

**விடை: ஆ ,ஈ**

**3. பாயிரம் இல்லது.......... அன்றே.**

அ)காவியம் **ஆ)பனுவல்** இ)பாடல் ஈ)கவிதை

**விடை: ஆ**

**4. மொழி முதல் எழுத்துக்களின் அடிப்படையில் முறையானதைக் கண்டுபிடிக்க.**

**அ)அன்னம்,கிண்ணம்** ஆ)டமாரம்,இங்ஙனம் இ)ரூபாய்,லட்சாதிபதி ஈ)றெக்கை,அங்ஙனம்

**விடை: அ**

**5. ஒரு திரவ நிலையில் நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்து கொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாக பதிவு செய்யப்படுகிற போது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திடநிலையை அடைகிறது. இவ்வரிகள் உணர்த்தும் கருத்து.**

அ)மொழி என்பது திட,திரவ நிலையில் இருக்கும்.

ஆ)பேச்சுமொழி எழுத்துமொழியை திட,திரவப் பொருளாக உருவகப்படுத்தவில்லை.

**இ)எழுத்துமொழியை விட பேச்சுமொழி எளிமையானது.**

ஈ)பேச்சுமொழியைகாட்டிலும் எழுத்துமொழி எளிமையானது.

**விடை: இ**

**6. "தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை வேரில்லாத மரம் கூடில்லாத பறவை" என்று கூறியவர்?**

அ)பாரதிதாசன் **ஆ)இரசூல் கம்சதோவ்** இ)சு.வில்வரத்தினம் ஈ)வால்ட்விட்மன்

**விடை :ஆ**

**7. "ஆறாம் திணை" சிறுகதையின் ஆசிரியர்?**

அ)சு.வில்வரத்தினம் ஆ)இந்திரன் இ)பவணந்தி முனிவர் **ஈ)அ.முத்துலிங்கம்**

**விடை: ஈ**

**8.பொருத்தமானஇலக்கிய வடிவம் எது?**

அ)ஏதிலிக்குருவிகள் - மரபுக் கவிதை ஆ)ஐங்குறுநூறு - புதுக்கவிதை

இ)திருமலை முருகன் பள்ளு - சிறுகதை **ஈ)யானை டாக்டர்- குறும்புதினம்**

**விடை: ஈ**

**9. "வான் பொய்த்தது" என்ற சொற்றொடர் உணர்த்தும் மறைமுகப் பொருள்?**

அ)வானம் இடிந்தது **ஆ)மழை பெய்யவில்லை** இ)மின்னல் வெட்டியது ஈ)வானம் என்பது பொய்யானது

**விடை :ஆ**

**10. கருப்பட்டி பனங்கற்கண்டு போன்றவை** அ)மதிப்புக் கூட்டுப்பொருள் ஆ)நேரடிப் பொருள்கள்

**I)அ - மட்டும் சரி** ii)ஆ - மட்டும் சரி iii)இரண்டும் சரி iv)அ தவறு,ஆ-சரி

**விடை: அ**

**11. பிழையான தொடரைக் கண்டறிக.**

அ)பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரிக்கின்றனர்.

ஆ)ஏதிலிக்குருவிகள் என்பது வாழ்வதற்கான சூழல் கிடைக்காத குருவிகளாகும்.

**இ)குறைந்த எட்டுத்தொகை அடிகளை ஐங்குறுநூறு நூல்களுள் உடையது.**

ஈ)யானைகளால் வெகு தொலைவில் உள்ள நீரினை வாசனை மூலம் அறிய முடியும்.

**விடை: இ**

**12. "உழவு உலகிற்கு அச்சாணி" என்று குறிப்பிட்டவர்?**

அ)திருமூலர் **ஆ)திருவள்ளுவர்** இ)பாரதியார் ஈ)அவ்வையார்

**விடை; ஆ**

**13. "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்" என்று முழங்கியவர்?**

அ)பாரதிதாசன் ஆ)வாணிதாசன் **இ)பாரதியார்** ஈ)அவ்வையார்

**விடை: இ**

**14. ஐந்து வேளாண்மை மந்திரங்களை உலகிற்குச் சொன்னவர்?**

**அ)மசானபு ஃபுகோகா** ஆ)நம்மாழ்வார் இ)எமனோ ஈ)பர்ரோ

**விடை: அ**

**15. உலகச் சிட்டுக்குருவிகள் நாள்?**

அ)பிப்ரவரி 20 ஆ)மார்ச் **2** **இ)மார்ச் 20** ஈ)ஏப்ரல் 2

**விடை; இ**

**16."திருமலை முருகன் பள்ளு" - நூலின் ஆசிரியர்?**

அ)அழகியபெரியவன் **ஆ)பெரியவன் கவிராயர்** இ)திரிகூடராசப்பர் ஈ)பிள்ளைப் பெருமாள்

**விடை :ஆ**

17". **யானை டாக்டர்" என்னும் குறும்புதினத்தின் ஆசிரியர்?**

**அ)ஜெயமோகன்** ஆ)பிரபஞ்சன் இ)டாக்டர்.கே ஈ)வேணுமேனன்

**விடை :அ**

**18. "காட்டின் மூலவர்" என்று அழைக்கப்பட்டவர் ?**

அ)சிங்கம் ஆ)புலி **இ)யானை** ஈ)பாம்பு

**விடை: இ**

**19. "ராபின்சன் குரோசோ" என்னும் நூலை எழுதியவர்?**

**அ)டேனியல் டிஃபோ** ஆ)ரூசோ இ)மல்லார்மே ஈ)எர்னஸ்ட் காசிரர்

**விடை: அ**

**20.கூற்று:"கோடு என்பது தமிழ்ச்சொல்ஆகும்.**
**விளக்கம்: கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை, என்னும் பொருள்களும் உண்டு.**

அ)கூற்று சரி, விளக்கம் தவறு **ஆ)கூற்றும்சரி, விளக்கமும் சரி** இ)கூற்று தவறு, விளக்கம் சரி

ஈ)கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை :ஆ**

**21. காவடிச் சிந்துக்குத் தந்தை என்று அழைக்கப்படுபவர் யார்?**

அ)பாரதிதாசன் **ஆ)அண்ணாமலையார்** இ)முருகன் ஈ)பாரதியார்

**விடை: ஆ**

**22. பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுக்க**

i) வெள்ளிவீதியார் -அ)புறநானூறு

ii)அண்ணாமலையார்-ஆ)சி.சு.செல்லப்பா

iii)வாடிவாசல் - இ)குறுந்தொகை

iv)இளம்பெருவழுதி - ஈ)காவடிச்சிந்து

i)அ ஆ இ ஈ ii)ஆ ஈ அ **இ** **iii) இ ஈஆ அ** iv) இ ஈ அ ஆ

**விடை: iii**

**23. "இனிதென" இச்சொல்லில் அமைந்த புணர்ச்சி விதிகளை வரிசைப்படுத்துக.**

**அ)உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும், உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.**

ஆ)தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்.

இ)உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே.

ஈ)தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும்.

**விடை: அ**

**24. பகுபத உறுப்புகளில் இடம்பெறும் அடிப்படை உறுப்புகள் எவை?**

அ)பகுதி, இடைநிலை, சந்தி ,சாரியை, விகுதி, விகாரம்

ஆ)பகுதி, இடைநிலை, சாரியை

இ)பகுதி, சந்தி, விகாரம்

**ஈ)பகுதி, விகுதி**

**விடை: ஈ**

**25." OROLOGYஎன்பது" .....................பற்றிய ஆய்வு?**

**அ)மலை,குன்றுகள்** ஆ)தாவரங்கள்,விலங்குகள் இ) ஆறு,கடல் ஈ)பறவைகள்,வண்டுகள்

**விடை; அ**

**26."சேயோன் மேய மைவரை உலகம்" என்று குறிப்பிடும் நூல்?**

அ)திருமுருகாற்றுப்படை ஆ)அகத்தியம்**இ)தொல்காப்பியம்**ஈ)திருமலை முருகன் பள்ளு

**விடை; இ**

**27."KVT COMPLEX"என்பதன் பொருள்?**

**அ)கொற்கை, வஞ்சி, தொண்டி, வளாகம்**

ஆ)கொற்கை, வயலூர், தொண்டி, வளாகம்

இ)குறிஞ்சி, வஞ்சி, தொண்டி, வளாகம்

ஈ)குறிஞ்சி, வஞ்சி, திருச்சி, வளாகம்

**விடை: அ**

**28. குறுந்தொகையில் உள்ள பாடல்களின் எண்ணிக்கை?**

**அ)401** ஆ)201 இ)256 ஈ)101

**விடை: அ**

**29.தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும் நூல்?**

அ)அகநானூறு **ஆ)புறநானூறு** இ)குறுந்தொகை ஈ)பரிபாடல்

**விடை :ஆ**

**30. "வாடிவாசல்" குறும்புதினத்தின் ஆசிரியர்?**

**அ)சி.சு.செல்லப்பா** ஆ)சி .சு.சின்னப்பா இ)இந்திரன் ஈ)ஜெயகாந்தன்

**விடை: அ**

**31. துன்பப்படுபவர்.............**

அ)தீக்காயம்பட்டவர் ஆ)தீயினால் சுட்டவர் இ)பொருளைக் காக்காதவர் **ஈ)நாவைக் காக்காதவர்**

**விடை: ஈ**

**32. ஒப்புரவு என்பதன் பொருள்.........**

அ)அடக்கமுடையது ஆ)பண்புடையது **இ)ஊருக்கு உதவுவது** ஈ)செல்வமுடையது

**விடை: இ**

**33. ஏடு, சுவடி,பொத்தகம், பனுவல், முதலிய சொற்கள் தரும் பொருள்.... என்பதாகும்?**

**அ)நூல்** ஆ)ஓலை இ)எழுத்தாணி ஈ)தாள்

**விடை: அ**

**34. சரியான விடையைத் தேர்க**

| | |
|---|---|
| அ)கல்வி அழகே அழகு | - 1.தொல்காப்பியச் சிறப்புப்பாயிர உரைப்பாடல் |
| ஆ)இளமையில் கல் | - 2.திருமந்திரம் |
| இ)துணையாய் வருவது தூய நற்கல்வி | - 3.ஆத்திசூடி |
| ஈ)பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல் | - 4. திருக்குறள் |
| | 5.நாலடியார் |



தமிழ்

i)அ-2,,ஆ-3, இ-4 ,ஈ-1 ii)அ- 3 , ஆ-4, இ-1,ஈ-2 **iii)அ-5 ,ஆ-3, இ-2 ,ஈ-1** iv)அ—4 ,ஆ-1 ,இ-2 ,ஈ-5

**விடை: (iii )**

**35.தொல்காப்பியத்தில் உள்ள மொத்த இயல்களின் எண்ணிக்கை?**

அ)9 ஆ)3 **இ)27** ஈ)13

**விடை; இ**

**36. நிழல் போல தொடர்ந்தான் - இது எவ்வகை உவமை?**

**அ)வினை** ஆ)பயன் இ) வடிவம் ஈ)மெய்

**விடை :அ**



**37. ஆனந்தரங்கருக்குத் தொடர்பில்லாதது எது?**

அ)மொழிபெயர்ப்பாளர் ஆ)இந்தியாவின் பெப்பிசு

இ)தலைமை துவிபாஷி **ஈ) உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை**

**விடை: ஈ**

**38. உறுபகை, இடன் ஆகிய சொற்களின் இலக்கண குறிப்பு?**

**அ)உரிச்சொல்தொடர் ,ஈற்றுப் போலி** ஆ)வினைத்தொகை, இடவாகு பெயர்

இ)வினையெச்சம், வினைத்தொகை ஈ)பெயரெச்சம், பண்புத்தொகை

**விடை: அ**

**39. சரியானதைத் தேர்ந்தெடுக்க.**

அ)வரை -மலை ஆ)வதுவை -திருமணம் இ)வாரணம்- யானை ஈ)புடவி- கடல்

**i)அ,ஆ,இ-சரி, ஈ-தவறு** ii)ஆ,இ,ஈ-சரி, ஈ- தவறு

iii)அ,இ,ஈ-சரி ,ஆ- தவறு iv)அ,ஆ,ஈ-சரி ,இ- தவறு

**விடை: (i)**

**40. நேரொன்றாசிரியத்தளை எனப்படுவது?**

அ)காய் முன் நேர் ஆ)காய்முன் நிரை இ)கனிமுன் நிரை **ஈ)மாமுன் நேர்**

**விடை: ஈ**

**41. மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து ............நினை**.

அ)முகக்குறிப்பை அறிந்தவரை ஆ)எண்ணியதை எண்ணியவரை

**இ)மறதியால் கெட்டவர்களை** ஈ)சொல்லேர் உழவரை

**விடை: இ**

**42.ஒட்டுப்போடாத ஆகாயம்போல இந்த உலகமும் ஒன்றேதான் - இக்கவிதையில் பயின்று வருவது?**

**அ)உவமை** ஆ)உருவகம் இ)உள்ளுறை ஈ)இறைச்சி

**விடை; அ**

**43. பொருத்துக**

அ)அடி அகரம் ஐ ஆதல் - செங்கதிர்
ஆ)முன் நின்ற மெய் திரிதல் - பெருங்கொடை
இ)ஆதிநீடல் - பைங்கூழ்
ஈ)இனமிகல் - காரிருள்

அ)4321 **ஆ)**2413 இ)**3142** ஈ)2431

**விடை: இ**

**44. தவறான இணையைத் தேர்வு செய்க.**

அ)மொழி + ஆளுமை - உயிர்+ உயிர்

ஆ)தமிழ் + உணர்வு - மெய் +உயிர்

**இ)கடல் + அலை - உயிர் + மெய்**

ஈ)மண் + வளம் - மெய் + மெய்

**விடை: இ**

**45. திருக்குறளையும், திருவாசகத்தையும்ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவர்?**

அ)உ..வே.சா ஆ)திரு.வி.க இ)கால்டுவெல் **ஈ)ஜி.யு.போப்**

**விடை: ஈ**

**46.DOCUMENT - கலைச்சொல்**லாக்கம் **தருக**.

அ)ஒப்பந்தம் **ஆ)ஆவணம்** இ)நகல் ஈ)கோப்பு

**விடை : ஆ**

**47."CLASSICAL LANGUAGE"- கலைச்சொல் தருக**.

அ)கல்விக்குழு ஆ)மனஆற்றல் **இ)செம்மொழி** ஈ)மதிப்புக் கல்வி

**விடை: இ**

**48." HARVESTING" - கலைச்சொல் தருக.**

**அ)அறுவடை** ஆ)ஒட்டு விதை இ)தொழு உரம் ஈ)வேர்முடிச்சுகள்

**விடை: அ**

**49. "PHILOSOPHER " - கலைச்சொல் தருக.**

அ)இதழாளர் ஆ)கலை விமர்சகர் **இ) மெய்யியலாளர்** ஈ)அழகியல்

**விடை: இ**

**50. 'PASSPORT"கலைச்சொல் தருக.**

அ)நுழைவு இசைவு ஆ)உலகமயமாக்கல் **இ)கடவுச்சீட்டு** ஈ)சிற்றீகை

**விடை: இ**

**51. தஞ்சை பெரிய கோயிலை'தட்சிணமேரு ' என்று பெருமையுடன் அழைத்தவர்?**

**அ)இராஜராஜ சோழன்** ஆ)இராஜேந்திர சோழன் இ)கரிகால சோழன் ஈ)பராந்தக சோழன்

**விடை :அ**

**52.கூற்று 1:தஞ்சைப் பெரிய கோவிலுள்ள ஓவியங்களை எஸ்.கே. கோவிந்தசாமி கண்டறிந்தார்.**
**கூற்று 2:அங்குள்ள சோழர் காலத்து ஓவியங்கள் பிரஸ்கோ வகையைச் சார்ந்தவை.**

அ)கூற்று 1 சரி, கூற்று 2 தவறு

ஆ) கூற்று இரண்டும்தவறு

இ) கூற்று 1 தவறு, கூற்று 2 சரி

**ஈ) கூற்று இரண்டும் சரி**

**விடை:ஈ**

**53. "ழ" என்னும் பெயரில் கவிஞர் ஆத்மாநாமால் வெளியிடப்பட்டது. கவிதைக் கிரீடம் என்று போற்றப்படுவது?**

**அ)சிற்றிதழ், குற்றாலக் குறவஞ்சி**

ஆ) கவிதை நூல், திருச்சாழல்

இ) நாளிதழ், நன்னகர் வெண்பா

ஈ) கட்டுரை நூல், குற்றாலக் கோவை

**விடை: அ**

**54. கீழுள்ளவற்றை பொருத்தி விடை தேடுக**

அ)விரியன் - 1)தண்டை

ஆ) திருகுமுருகு - 2)காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3)சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4)பாடகம்

i)3,4,2,1 **ii)3,1,4,2** iii)4,3,2,1 iv) 4,1,3,2

**விடை: (ii)**

**55. பெண்கள் விளையாடும் விளையாட்டு வகைகளில் ஒன்று.**

**அ)சாழல்** ஆ)சிற்றில் இ)சிறுதேர் ஈ)சிறுபறை

**விடை: அ**

**56. ஈறுபோதல், முன்னின்றமெய்திரிதல், தனிக்குறில் முன் ஒற்று உயிர்வரின் இரட்டும், உடல் மேல் உயிர் வந்து ஒன்றுதல் ஆகிய வரிசையில் புணர்ந்த சொல்?**

அ)மூதூர் ஆ)வெற்றிடம் **இ)நல்லாடை** ஈ)பைந்தளிர்

**விடை: இ**

**57. "ஜனப்பிரளயம்" என்னும் வடமொழிச் சொல்லுக்குரிய தமிழ்ச்சொல் எது?**

அ)மக்கள் அலை ஆ)உயிர் அலை **இ)மக்கள் வெள்ளம்** ஈ)மக்கள் அவை

**விடை :இ**

**58. கூற்று: எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்து, புறம் சார்ந்த நூல்.**
**காரணம்: சேர மன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுகிறது இந்நூல்.**

அ)கூற்று சரி ,காரணம் தவறு **ஆ)இரண்டும் சரி**

இ)இரண்டிற்கும் தொடர்பில்லை ஈ)கூற்று தவறு, காரணம் சரி

**விடை: ஆ**

**59. "அழகும் அறிவும் இளமையும் வாய்ந்தவன்" யார் யாரிடம் கூறியது?**

அ)அமைச்சர் கவிஞரிடம் ஆ)மன்னர் அமைச்சரிடம்

**இ)அமைச்சர் மன்னரிடம்** ஈ)மன்னர் அமுதவல்லியிடம்

**விடை; இ**

**60. அடையாறுப் பாலத்தின் சுவற்றில் எழுதாதீர்கள் - இவ்வரியில் உள்ள சொற்பிழைகளின் திருத்தம்?**

அ)அடையாற்றுப் பாலத்தின் சுவற்றில் ஆ)அடையாறுப் பாலத்தின் சுவரில்

இ)அடையாறுப் பாலத்தின் சுவற்றில் **ஈ)அடையாற்றுப் பாலத்தின் சுவரில்**

**விடை; ஈ**

**61. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க**

அ)காவலாளி ஆ)மேலாளர் இ)உதவியாள் **ஈ)ஆசிரியர்**

**விடை: ஈ**

**62. பூஜை, விஷயம், உபயோகம் என்பவைமுறையே............ என்று தமிழில் வழங்கப்படும்.**

**அ)வழிபாடு, செய்தி, பயன்பாடு** ஆ)பயன்பாடு, வழிபாடு, செய்தி

இ)வழிபாடு, பயன்பாடு, செய்தி ஈ)பயன்பாடு, செய்தி, வழிபாடு

**விடை: அ**

**63. கூவும் குயிலும் கரையும் காகமும் தொடரில் இடம் பெற்ற மரபு ?**

அ) பெயர்மரபு **ஆ)வினைமரபு** இ)ஒலிமரபு ஈ)இவை மூன்றும்

**விடை; ஆ**

**64. யாரே உனைப்போல் அனுதினம் உழைப்போர்? இது எவர் மொழி?**

அ)வாய்க்கால் ஆ)நாங்கூழ் **இ)நடராசன்** ஈ)புல்

**விடை; இ**

**65.தமிழின்முதல் பா வடிவ நாடகநூல்?**

அ)இரகசியவழி **ஆ)மனோன்மணியம்**

இ)நூல்தொகை விளக்கம் ஈ)திருவிதாங்கூர் அரசர் வரலாறு

**விடை: ஆ**

**66. சொற்களை ஒழுங்குப்படுத்திச் சொற்றொடரக்குக**

அ)நான் எழுதுவதோடு இன்று இலக்கிய மேடைகளிலும் இதழ்களிலும் பேசுகிறேன்.

**ஆ)இன்று நான் இதழ்களில் எழுதுவதோடு இலக்கிய மேடைகளிலும் பேசுகிறேன்.**

இ)இலக்கிய மேடைகளிலும் இன்று எழுதுவதோடு நான் இதழ்களில் பேசுகிறேன்.

ஈ)இதழ்களில் பேசுகிறேன் நான் இன்று இலக்கிய மேடைகளிலும் எழுதுவதோடு.

**விடை; ஆ**

**67. "ஹைக்கூ" என்பதன் தமிழாக்கம்.**

அ)கலிப்பா **ஆ)துளிப்பா** இ)ஒலிப்பா ஈ)களிப்பா

**விடை :ஆ**

**68. பின்வருவனவற்றுள் இரட்டைக்கிளவி எது?**

அ)பார்த்துப்பார்த்து ஆ)நில்நில் இஉழுதுமுது **ஈ)நெறுநெறு**

**விடை: ஈ**

**69. பெயரெச்சம், பண்புத்தொகை- இலக்கணக்குறிப்பு அமைந்த சொற்கள்?**

அ)முளைத்த, பின்னிய ஆ)இளமுகம், வீழருவி

**இ)முளைத்த, நல்லூண்** ஈ)வாய்க்கால், செய்தொழில்

**விடை: இ**

**70.பின்வருவனவற்றுள் வியங்கோள் வினைமுற்று எது?**

அ)புதுக்கியவர் **ஆ)ஓதுக** இ)நெடுங்குன்று ஈ)உழுதுழுது

**விடை: ஆ**



## மொழிப்பயிற்சி

**I)தொடரில் உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி இரண்டு சொற்றொடர்கள் ஆக்குக**

ஓர் பயிர் பறவை வளர வேண்டும் அழகான தண்ணீர் மயில்

அ)**மயில் ஓர் அழகான பறவை.**
**ஆ)பயிர் வளரத் தண்ணீர் வேண்டும்.**

2. **பள்ளிக்கூடம் எல்லாம் தருபவை ஒவ்வொரு கலைகள் குழந்தையும் போக வேண்டும் மகிழ்ச்சி**

அ)**ஒவ்வொரு குழந்தையும் பள்ளிக்கூடம் போக வேண்டும்.**
**ஆ)கலைகள் எல்லாம் மகிழ்ச்சி தருபவை.**

**3. நிலவு வீசுவதால் தெற்கிலிருந்து மாலை தென்றல் மகிழ்விக்கும் எனப்படுகிறது மனதை**

அ)**தெற்கிலிருந்து வீசுவதால் தென்றல் எனப்படுகிறது.**
**ஆ)மாலை நிலவு மனதை மகிழ்விக்கும்.**

**4. பிறர் செய்யாவிடினும் செய்த தீமை மறக்கக்கூடாது நன்மை செய்யக்கூடாது உதவியை**

அ)**பிறர் செய்த உதவியை மறக்கக்கூடாது.**
**ஆ)நன்மை செய்யாவிட்டாலும் தீமை செய்யக்கூடாது.**

**5. நேற்று ஏன் வந்த பையன் பக்கத்தில் யார் இருக்கவில்லை தெரியுமா?**

அ)**நேற்று வந்த பையன் யார் தெரியுமா?**
**ஆ)ஏன் பக்கத்தில் இருக்கவில்லை?**
**6. கோசல மக்கள் நாடு ஒரு மகிழ்ச்சியாக சிறந்த வாழ்ந்து நாடு வந்தனர்**

அ)**கோசல நாடு ஒரு சிறந்த நாடு.**
**ஆ)மக்கள் மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தனர்.**

**II.வேர்ச்சொற்களை எடுத்துக்காட்டில் உள்ளவாறு தொடர்களாக மாற்றுக.**

வேர்ச்சொல் - வா

**அருணா வீட்டுக்கு வந்தாள். - வினைமுற்று.**
**வந்த பேருந்தில் அனைவரும் ஏறினர். - பெயரெச்சம்.**
**கண்ணன் மேடையில் வந்து நின்றான். - வினையெச்சம்.**
**என்னைப் பார்க்க வந்தவர் என் தந்தையின் நண்பர். - வினையாலணையும் பெயர்.**

**வேர்ச்சொல் - பேசு**

**அவள் பேசினாள். - வினைமுற்று.**
**அவள் பேசிய மொழி தமிழ்மொழி. - பெயரெச்சம்.**
**அவள் பேசி முடித்தாள். - வினையெச்சம்.**
**அவளிடம் பேசியவர் ஆசிரியர். - வினையாலணையும் பெயர்.**

வேர் சொல் - தா

**அண்ணன் தந்தான். - வினைமுற்று.**
**அண்ணன் தந்த பரிசு. - பெயரெச்சம்.**
**அண்ணன் தந்து சென்றான். - வினையெச்சம்.**
**அண்ணனிடம் தந்தவர் யார்? - வினையாலணையும் பெயர்.**

வேர்ச்சொல் - ஓடு

**வேந்தன் வேகமாக ஓடினான். - வினைமுற்று.**
**வேகமாக ஓடிய பையன் யார்? - பெயரெச்சம்.**
**அவன் ஓடி விழுந்தான். - வினையெச்சம்.**
**அங்கே ஓடியவர் யார்? - வினையாலணையும் பெயர்.**

வேர்ச்சொல்- பாடு

**பாரதி பாடினாள். - வினைமுற்று.**
**பாரதி பாடிய பாட்டு பாப்பா பாட்டு. - பெயரெச்சம்.**
**பாரதி பாடி முடித்தாள். - வினையெச்சம்.**
**மேடையில் பாடியவர் யார்? - வினையாலணையும் பெயர்.**

## III.மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.

**1.உலை, உளை, உழை**

மன உளைச்சல் தீரவும், வீட்டில் உலை கொதிக்கவும், உழைக்க வேண்டும்.

**2. வலி, வளி, வழி**

வளி, வழியை அடைத்தால் வயிற்றில் வலி பிறக்காதோ?

**3. கலை, களை, கழை**

கழைக்கூத்தாடிக் கலைஞன் தன் கலைத்திறத்தால் நாட்டின் அறியாமை, மாயையை களையெடுத்தான்.

**4. கனை, கணை**

கணையால் தாக்கப்பட்ட குதிரை கனைத்துக் கொண்டே இருந்தது.

**5. குரை, குறை**

நாய் குரைக்காமல் போனது ஒரு குறையா?

**6. பொரி, பொறி**

பொரி வாங்கி வரவில்லை என்று என்னை பொறித்தெடுத்து விட்டாள் என் மகள்.

## IV.வல்லின மெய்களை இட்டும் நீக்கியும் எழுதுக

1.குமரனை பற்றி தெரிந்துக் கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகைத் தாருங்கள். என் வீட்டிற்கு பக்கத்து வீடுதான் குமரனது வீடு.

**விடை: குமரனைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டுமா? என் வீட்டிற்கு வருகை தாருங்கள். என் வீட்டிற்குப் பக்கத்து வீடுதான் குமரனது வீடு.**

2. அனைத்து துறைகளிலும் ஆண்களை போலவேப் பெண்களும் அரசுப் பணியை பெற வேண்டும்.
**விடை: அனைத்துத் துறைகளிலும் ஆண்களைப் போலவே பெண்களும் அரசுப் பணியைப் பெற வேண்டும்.**

3. கல்வி கேள்விகளில் சிறந்தவர் நன்மைத் தீமைகளை புரிந்து பேசுவர்
**விடை: கல்விக் கேள்விகளில் சிறந்தவர் நன்மை தீமைகளைப் புரிந்து பேசுவர்.**

4. தமிழர் ஆற்று தண்ணீரை தேக்கி சேமித்துக் கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.

**விடை: தமிழர் ஆற்றுத் தண்ணீரைத் தேக்கி சேமித்துக் கால்வாய் வெட்டி பாசனம் செய்தனர்.**

5. சான்றோர் மிகுந்தப் பொறுப்புடன் சிறப்பான சேவைப் புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.

**விடை: சான்றோர் மிகுந்த பொறுப்புடன் சிறப்பானச் சேவை புரிந்து கொள்கையை நிலைநாட்டச் செய்தனர்.**

தமிழ்

### V.சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடர் அமைக்க.

**1.கால்நடை:**
**கால்நடை - கால்நடைகளை மேய்ச்சல் நிலத்திற்கு ஓட்டிச் சென்றனர்.**
**கால் + நடை - கால் நடையாக நடந்து செல்வது உடலுக்கு நன்மை பயக்கும்.**

**2.பிண்ணாக்கு:**
**பிண்ணாக்கு - மாடுகளுக்கு உணவாக பயன்படுகிறது.**
**பிள்+ நாக்கு - பாம்பிற்கு பிளவுபட்ட நாக்குண்டு.**

**3.எட்டு வரை:**
**எட்டு வரை - கண்ணன் இரவு எட்டு வரை வேலை செய்தான்**
**எள்+ துவரை - வயலில் எள் துவரை பயிரிடப்பட்டது.**

**4.அறிவில்லாதவன்:**
**அறிவில்லாதவன் - ஆதவன் அறிவில்லாதவன் போல் நடந்து கொள்கிறான்.**
**அறிவில் +ஆதவன் - மன்னன் அறிவில் ஆதவனாய் இருத்தல் வேண்டும்.**

**5.தங்கை:**
**தங்கை - என் தங்கையின் பெயர் கங்கா.**
**தம்+ கை - தலைவர் தம் கைகளாலேயே பரிசை வழங்கினார்.**

**6.வைகை:**
**வைகை - மதுரைக்கு அழகு வைகை.**
**வை+கை - என் மீது வை கை என்றாள் என் தோழி.**

**7.நஞ்சிருக்கும்:**
**நஞ்சிருக்கும் - நஞ்சிருக்கும் ஆடை நல்லாடை அன்று.**
**நஞ்சு + இருக்கும் - பாம்பிற்கு பற்களில் /வாயில் நஞ்சு இருக்கும்.**

### VI.புதிர்களுக்கான விடைகளை தேர்ந்தெடுத்து எழுதுக.

1. எலியும் நுழையும்; எழிலரசி கையும் நுழையும். **விடை - வளை**
2. அடிக்கவும் செய்யலாம்; கோடைக்கு கூழாகவும் குடிக்கலாம் . **விடை - கம்பு**
3. கண்ணிலும் எழுதலாம்; வெண்தாளிலும் எழுதலாம். **விடை - மை**
4. அறிவின் பெயரும் அதுதான்; அம்புலியின் பெயரும் அதுவேதான் **விடை - மதி**
5. பூவின் உறுப்பும் நானே; புன்னகையின் பிறப்பிடமும் நானே . **விடை - இதழ்**
6. வண்டியையும் இயக்கும்; பெரும் கப்பலையும் தாங்கும். **விடை - ஆழி**

**VII.கருத்துப் படத்தைப் புரிந்து கொண்டு பத்தியாக எழுதுக**

பொருள் இலக்கணம்

அகப்பொருள் | புறப்பொருள்

↓

முதற்பொருள் | கருப்பொருள் | உரிப்பொருள்

↓

நிலம் | பொழுது

↓

சிறுபொழுது | பெரும் பொழுது

தமிழ் மொழியின் ஐவகை இலக்கணப் பிரிவுகளில் ஒன்று பொருள் இலக்கணம்ஆகும். பொருள் இலக்கணம் அகம், புறம் என இரு வகைப்படுகிறது. அன்பு நிறைந்த காதல் வாழ்வை பற்றிக் கூறுவது அகப்பொருள் ஆகும். வீரம், கொடை, புகழ் பற்றிக் கூறுவது புறப்பொருள் ஆகும். அகப்பொருள் இலக்கணம் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் எனும் மூவகைப் பிரிவுகளை உடையது. நிலமும் பொழுதும் முதற் பொருளாகும். ஒரு நாளின் கூறுகளாக சிறுபொழுதும், ஓர் ஆண்டின் கூறுகளாக பெரும்பொழுதும் பகுக்கப்பட்டுள்ளது.

**VIII,தொடர் மாற்றம்**

1.மூன்று நாட்கள் கல்லூரிக்கு விடுமுறை. மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் சென்றனர். சிற்பங்களை கண்டு மகிழ்ந்தனர். - கலவை தொடராக மாற்றுக.

**விடை: மூன்று நாட்கள் கல்லூரிக்கு விடுமுறையாதலால், மாணவர்கள் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலுக்குச் சென்று சிற்பங்களை கண்டு மகிழ்ந்தனர்**.

2. தஞ்சைக் கோயில் எண்பட்டை வடிவில் கட்டப்பட்ட திராவிட கலைப் பாணியாகும். - வினாத் தொடராக்குக.

**விடை: தஞ்சைக் கோயில் எவ்வடிவில் கட்டப்பட்ட திராவிடக் கலைப்பாணி?**

3. என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிற்பக்கலை. - செய்தி தொடராக்குக.

**விடை: மதுரை மீனாட்சி அம்மன் கோயில் சிற்பக்கலை மிகவும் அழகானது**.

4. நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்வேன். - பொருள் மாறா எதிர்மறைத் தொடராக மாற்றுக.

**விடை: நான் வாரத்தின் இறுதி நாள்களில் நூலகத்திற்குச் செல்லாமல் இரேன்.**

**IX.விடுபட்ட இடத்தில் அடுத்து வர வேண்டிய சொற்களை கண்டறிந்து எழுதுக**

1. தனிமொழி - அறிவு .................. – வண்ணமயில்; பொதுமொழி.............................

**விடை : தொடர்மொழி , பலகை /தாமரை/ வைகை**

2. கார்காலம்................: குளிர்காலம்- ஐப்பசி: கார்த்திகை.................. மார்கழி தை

**விடை: ஆவணி, புரட்டாசி / முன்பனி**

3. எழுத்து, சொல், .......... , யாப்பு, ..................

**விடை : பொருள், அணி**

4. எழுத்து, .......... சீர், தளை, .................... தொடை.

**விடை: அசை, அடி**

5. சேரன் –வில், சோழன்-.................. , .......................... மீன்.

**விடை: புலி, பாண்டியன்**



**X.அடைப்புக்குள் உள்ள ஆக்கப்பெயர் விகுதிகளைக் கொண்டு விடுகதைகளுக்குரிய ஆக்கப் பெயர்களைக் கண்டறிக.**

1.வேவு பார்த்திடுவான்; ஓசையின்றிச் சென்றிடுவான் (ஆளி ) - **உளவாளி**
2. அறிவைத் தேடிப் போகும் இடம்; உலகம் அறிய உதவும் இடம் (அகம்) - **நூலகம்**
3. வந்தால் மகிழ்ச்சி இது; உழைத்தால் கிடைக்கும் இது (மானம்) - **வருமானம்**
4. வேடம் போட்டவன் வேடதாரி; பட்டம் வாங்கினவன்?(தாரி) - **பட்டதாரி**
5. அளந்து அளந்து கொட்டிடுவான்; அகம் மகிழ தந்திடுவான்.(ஆள்) – **படியாள்**

**XI.மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக**

**1.எதிர்நீச்சல்**:

**வாழ்வில் எத்தனைத் தடைகள் வந்தாலும், அவற்றைக் கடந்து எதிர்நீச்சல் போட்டு வெற்றி பெற வேண்டும்.**

**2.மதில் மேல் பூனை:**

**கண்ணன் மதில் மேல் பூனை போல் படிப்பில் ஒரு நிலை இல்லாமல் இருந்தான்**.

**3,முதலைக்கண்ணீர்:**

**காவலரிடம் சிக்கிய கள்வன் நான் கள்வன் இல்லை என்று முதலைக் கண்ணீர் வடித்தான்**.

**4.கானல் நீர்:**

**உழைக்கும் உழைப்பாளியின் / உழவனின் உயர்வு என்பது கானல் நீராகவே உள்ளது**.

**5.சொந்தக் காலில் நிற்றல்:**

**உறவுகளால் உதாசீனப்படுத்தப்பட்ட உதாரன், தன் அயராத உழைப்பினால் சொந்தக் காலில் நின்றான்**.

**XII.மெய்ப்புத் திருத்துநர் பணி வேண்டி நாளிதழ் முதன்மை ஆசிரியருக்குக் கீழ்காணும் விவரங்களுடன் தன்விவர குறிப்பு ஒன்று எழுதுக**.

(பெயர், வயது, பாலினம், பிறந்தநாள், பெற்றோர், முகவரி, அலைபேசி எண், மின்னஞ்சல் முகவரி, அறிந்த மொழிகள், எடை, உயரம், குருதி வகை, கல்வித் தகுதி)

**அனுப்புதல்;**

அ.அமுதன்,
2/123 அண்ணல் தெரு,
சமத்துவபுரம்,
கிருஷ்ணகிரி. 635112

**பெறுதல்;**

முதன்மை ஆசிரியர் அவர்கள்,
தினத்தந்தி நாளிதழ்,
சென்னை.

**ஐயா,**

பொருள்: மெய்ப்புத் திருத்துநர் பணி வேண்டுதல் தொடர்பாக.

வணக்கம். தங்கள் நாளிதழில் மெய்ப்பு த் **திருத்துநர்** பணிக்கு ஆட்கள் தேவை என்பதனை நாளிதழ் செய்தி மூலம் அறிந்தேன். எனவே, உடன் விண்ணப்பிக்கிறேன். என்னைத் தேர்வு செய்வீர்கள் எனில்,என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் முதுமொழிக்கேற்ப நல்வழியில் நடந்து கொள்வேன் என்று உறுதியளிக்கிறேன்.

நன்றி..

தேதி :12.06.2024

இப்படிக்கு
தங்கள் உண்மையுள்ள
அ.அமுதன்

இடம்: கிருஷ்ணகிரி

**தன்விவரக் குறிப்பு**

| | |
|---|---|
| பெயர் | : அ. அமுதன் |
| வயது | :25 |
| பாலினம் | : ஆண் |
| பிறந்தநாள் | :04.05.1999 |
| பெற்றோர் | : அழகேசன், அமுதா |
| முகவரி | :2/ 123 அண்ணல் தெரு சமத்துவபுரம் கிருஷ்ணகிரி |
| தொலைபேசி எண் | : 98XXXX1213 |
| மின்னஞ்சல் முகவரி | : amudhan99@gmail.com |
| அறிந்த மொழிகள் | : தமிழ், ஆங்கிலம், இந்தி |
| எடை | :65 கி.கி |
| உயரம் | :165செ.மீ |
| குருதி வகை | : A+ |
| கல்வித்தகுதி | : இளங்கலைத் தமிழ் |

## அணி - இலக்கணம்

### 1.வேற்றுமை அணி

**அணி விளக்கம்**:இரண்டு பொருட்களுக்கு இடையே உள்ள ஒற்றுமையைக் கூறி பின் வேறுபடுத்திக் காட்டுவது.

**சான்று:**

தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு

**குறள் விளக்கம்**:

தீயினால் சுட்ட புண் ஆறிவிடும். நாவினால் சுட்ட வடு என்றும் ஆறாது.

**பொருத்தம்**:

ஒற்றுமை:தீயினால் சுட்டதும் புண், நாவினால் சுட்டதும் புண்.

வேற்றுமை: தீயினால் சுட்ட புண் ஆறிவிடும்; நாவினால் சுட்ட வடு ஆறாது.

**2. உவமை அணி**

**அணி விளக்கம்:**உவமைக்கும் , உவமேயத்திற்கும் இடையே போல, போன்ற எனும் உவம உருபுகள் வெளிப்படையாக வருவது உவமை அணி எனப்படும்.

**சான்று:** மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகையான் கண் படின்.

**குறள் விளக்கம்**:பெருந்தகையாளரிடம் உள்ள செல்வம் எல்லா உறுப்புகளையும் மருந்தாகத் தரும் மரத்தைப் போன்றது.

**பொருத்தம்:**

**உவமை:** பெருந்தகையாளரிடம் உள்ள செல்வம்

**உவமேயம்**: மருந்து மரம்

**உவம உருபு**: அற்று (வெளிப்படை)

**3. சொல் பின்வரும் நிலையணி**

**அணி விளக்கம்;**செய்யுளில் ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து, வெவ்வேறு பொருளைத் தருவது.

**சான்று** : பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**குறள்விளக்கம்:**பற்றுகளை அகற்றுவதற்காகவே பற்று இல்லாதவனைப் பற்றி நிற்க வேண்டும்.

**பொருத்தம்:**'பற்று' எனும் சொல் மீண்டும் மீண்டும் வந்து ஆசை,கடவுள்,கைக்கொள் முதலிய வெவ்வேறு பொருளில் வந்துள்ளது.

**4. சொற்பொருள் பின்வரும் நிலையணி**

**அணி விளக்கம்** : செய்யுளில் ஒரே சொல் மீண்டும் மீண்டும் வந்து, ஒரே பொருளைத் தருவது.

**சான்று:** வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.

**குறள் விளக்கம்:**

செயல் வலிமை, தன் வலிமை, பகைவரின் வலிமை, துணையாளர் வலிமை அறிந்து செயல்பட வேண்டும்.

**பொருத்தம் ;**

'வலி' என்னும் சொல் மீண்டும் மீண்டும் வந்து,'வலிமை' எனும் ஒரேபொருளைத் தருகிறது.

**5. பிறிது மொழிதல் அணி**

**அணி விளக்க**ம் : உவமையைக் கூறி உவமேயத்தைப் பெற வைப்பது.

**சான்று** : இளைதாக முள்மரம் கொல்க களையுநர்
கைகொல்லும் காழ்த்த இடத்து.

**குறள் விளக்கம்:**சிறியதாக இருக்கையிலே முள்மரத்தைக் களைந்து விடுக முதிர்ந்துவிட்டால் அது வெட்டுபவரின் கையையே வருத்தும்.

**பொருத்தம்:**முள் மரத்தை வெட்டுவதைப் போல பகைவர்கள் வலிமை பெறும் முன்பே அவர்களை அழித்து விட வேண்டும் என்பதே இக்குறட்பாவின் உட்கருத்து.

**6. உருவக அணி**

**அணி விளக்கம்:**உவமையையும் உவமேயத்தையும் ஒன்றெனக் கூறுவது.

**சான்று:** இரவென்னும் ஏமாப்பில் தோணி கரவென்னும்
பார்தாக்கப் பக்கு விடும்.

**குறள்விளக்கம்:**பிறரை எதிர்பார்த்து இரந்து வாழ்தல் என்னும் பாதுகாப்பற்ற படகு, கொடாமை என்னும் பாறை மோதினால் உடைந்து விடும்.

**பொருத்தம்:**பாதுகாப்பற்ற படகு -இரந்து வாழ்தல்

பாறை -கொடாமை

இவ்வாறு உருவகப்படுத்துவதால் இது உருவக அணியாகும்

# திணை

**1.பாடண் திணை**

**திணை விளக்கம்;** பாடு + ஆண் + திணை = பாடாண் திணை. பாடப்படும் ஆண் மகனின் உயர்ப் பண்புகளைக் கூறுவது.

**சான்று** : நூல்: பதிற்றுப்பத்து
ஆசிரியர் : குமட்டூர் கண்ணனார்
பாடல் ; 'பதி பிழைப்பு' அறியாது எனத் தொடங்கும் 'நிரைய வெள்ளம்' பாடல்.
**பொருத்தம்:**சேர நாடு செல்வவளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன், தன் நாட்டையும் மக்களையும் கண்ணெனக் காத்தான் என சேரனின் பெருமையினையும், ஈகைத் திறனையும் புகழ்ந்து கூறுவதால் இப்பாடல் பாடாண் திணைக்குப் பொருத்தமாக உள்ளது.

.

**2. பொதுவியல் திணை**

**திணை விளக்கம்**:வெட்சி முதல் பாடாண் வரை உள்ள திணைகளில் கூறப்படாத செய்திகளையும் பிற பொதுவானச் செய்திகளையும் தொகுத்துக் கூறுவது பொதுவியல் திணை எனப்படும்.

**சான்று** :நூல்: புறநானூறு
ஆசிரியர் :கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
பாடல் :' உண்டால்' அம்ம எனத் தொடங்கும் பாடல்.
**பொருத்தம்:தமிழர்கள்**புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுப்பர்; பழி உண்டாகுமாயின் உலகம் முழுவதும் கிடைப்பதாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். இத்தகையோர் இருப்பதால்தான் உலகம் நிலை பெற்று உள்ளது என பொதுவானச் செய்திகளைக் கூறுகிறது.

**3. முல்லைத் திணை**

**முதற்பொருள் :** காடும் காடு சார்ந்த இடமும்
**பெரும்பொழுது**:கார்காலம்
**சிறுபொழுது** : மாலை
**உரிப்பொருள் :** இருத்தலும் இருத்தல் நிமித்தமும்
**கருப்பொருள்**:
தெய்வம் : மாயோன்/ திருமால்
மக்கள் : ஆயர் ஆய்ச்சியர்
யாழ் : முல்லை யாழ்
பூ : முல்லைப்பூ
பண் : சாதாரி ப் பண்
பறை : ஏறுகோட்பறை
தொழில் : தினை விதைத்தல், நிரை மேய்த்தல்
**சான்று** :'காயா கொன்றை நெய்தல் முல்லை' எனத் தொடங்கும் பாடல்.
ஆசிரியர் : பேயனார்
நூல் : ஐங்குறுநூறு
**பொருத்தம்**: முல்லைப் பூ குறித்து பாடப் பெறுவதால் முல்லை திணைக்கு உரித்தாயிற்று.

**4. குறிஞ்சித் திணை.**

**முதற்பொருள்:**நிலம்: மலையும் மலை சார்ந்த நிலமும்
பெரும்பொழுது: கூதிர் , முன் பனி
சிறுபொழுது: யாமம்
**கருப்பொருள்:**
தெய்வம் : முருகன்

மக்கள் : குறவன் குறத்தியர்
பூ : குறிஞ்சிப்பூ
யாழ் : குறிஞ்சி யாழ்
பண் :குறிஞ்சிப்பண்
பறை ; தொண்டகப்பறை
தொழில் : தேனெடுத்தல், கிழங்கு அகழ்தல்
**உரிப்பொருள்:**புணர்தலும் புணர்தல் நிமித்தமும்
**சான்று** :பாடல்:'அம்ம வாழி தோழி' எனத் தொடங்கும் பாடல்
நூல் : குறுந்தொகை
ஆசிரியர் : வெள்ளிவீதியார்
பொருத்தம்: பிரிந்தோர் புணர்ப்போர் எனும் தொடர்.

**5. பாலைத்திணை**

**முதற்பொருள்:**நிலம் :சுரமும் சுரம் சார்ந்த நிலமும்
பெரும்பொழுது: இளவேனில்,முதுவேனில்
சிறுபொழுது :நண்பகல்
**கருப்பொருள்:**தெய்வம்: கொற்றவை
மக்கள் :எயினர், எயிற்றியர்
யாழ் : பாலையாழ்
பண் ; பஞ்சுரப்பண்
தொழில் :சூறையாடல், போர் செய்தல்
பறை :துடி
**உரிப்பொருள்:**பிரிதலும் பிரிதல் நிமித்தமும்
**சான்று:**பாடல்; 'பிரசம் கலந்த வெண்சுவை தீம்பால்' என்ற பாடல்.
நூல்: நற்றிணை
ஆசிரியர் : போதனார்

## துறை

**1. பொருண்மொழி காஞ்சித்துறை**

**துறை விளக்கம்:**மக்களுக்கு நலம் செய்யும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுதல்.
**சான்று:**பாடல்:'உண்டால் அம்ம' எனத் தொடங்கும் பாடல்.
நூல்:புறநானூறு
ஆசிரியர் : கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி
**பொருத்தம்:** தமக்காக உழைக்காமல் பிறருக்காக பெரும் முயற்சியுடன் உழைப்பவர்கள் இருப்பதால்தான் இந்த உலகம் நிலைபெற்றுள்ளது என்னும் வாழ்வியல் நெறிகளை எடுத்துக் கூறுகிறது.

**2. செந்துறை பாடாண் பாட்டு:**

**துறை விளக்கம்**:உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுதல்.
**சான்று:**பாடல்: 'பதி பிழைப்பு அறியாது' எனத் தொடங்கும் பாடல்.
நூல்: பதிற்றுப்பத்து
ஆசிரியர்: குமட்டூர் கண்ணனார்.
**பொருத்தம்;** சேரநாடு செல்வ வளம் மிக்கது. இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் தன் நாட்டையும் நாட்டு மக்களையும் கண்ணென காத்தான். ஆகவேதான் அவன் நாட்டு மக்கள் வேற்று நாட்டுக்குச் செல்ல விரும்புவதில்லை.

**3. மகள்நிலை உரைத்தல் துறை**

**துறை விளக்கம்;**தலைவனோடு உடன் போகிய, விளையாட்டுப் பருவம் மாறாத மகள், இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் கூறுவது.
**சான்று**:பாடல்:'பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்'

நூல் : நற்றிணை
ஆசிரியர் : போதனார்
**பொருத்தம்;**கணவன் வீட்டில் வறுமையுற்ற போதிலும், தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவை நினைத்துப் பாராது, ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு எனச் செவிலித்தாய் நற்றாயிடம் உரைத்தாள்.

**1. இலக்கிய நயம் பாராட்டுக**

மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு
வெள்ளியோடம்போல வரும் வெண்ணிலாவே!
வளர்ந்துவளர்ந்து வந்த வெண்ணிலாவே! மீண்டும்
வாடிவாடிப் போவதேனோ வெண்ணிலாவே !
கூகை ஆந்தைபோல நீயும் வெண்ணிலாவே! பகல்
கூட்டினில் உறங்குவாயோ? வெண்ணிலாவே!
பந்தடிப்போம் உன்னையென்று வெண்ணிலாவே! நீயும்
பாரில் வர அஞ்சினையோ? வெண்ணிலாவே! – கவிமணி

**மையக் கருத்து**:கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள் வெண்ணிலாவின் அழகைப் பல்வேறு வகையில் உவமைப்படுத்திப் பாடியுள்ளார்.

**மோனை நயம்**:முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
வளர்ந்து – வாடி
கூகை - கூட்டினில்

**எதுகை நயம்**:இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
வெண்ணிலாவே – வெண்ணிலாவே
வாடி - கோடி
**இயைபு நயம்**:இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
வெண்ணிலாவே –வெண்ணிலாவே

**அணிநயம்**:கவிமணியின் இப்பாடல் உவமை அணியில் அமைந்துள்ளது
.
**சந்த நயம்**:கவிஞரின் பாடல் 'எழுசீர் கழிநெடிலடி ஆசிரியவிருத்தத்தில்' அமைந்துள்ளது
.

**2. நயம் பாராட்டுக**

பெண்ணுக்கு ஞானத்தை வைத்தான்- புவி
பேணி வளர்த்திடும் ஈசன்
மண்ணுக்குள்ளே சில மூடர்- நல்ல
மாதர் அறிவைக் கெடுத்தார்
கண்கள் இரண்டினில் ஒன்றை -குத்தி
காட்சி கெடுத்திடலாமா?
பெண்கள் அறிவை வளர்த்தால்- வையம்
பேதமை யற்றிடும் காணீர். - பாரதியார்

**மையக்கருத்து**:பெண்கள் கல்வி கற்றால் இவ்வுலகம் அறியாமை இருளில் இருந்து நீங்கிவிடும் என்று பாரதியார் பெண்கல்வியை வலியுறுத்துகிறார்.

**மோனை**:முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
பெண்ணுக்கு - பேணி
மண்ணுக்குள்ளே –மாதர்
**எதுகை**:இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
பெண்ணுக்கு- மண்ணுக்கு
கண்கள் –பெண்கள்
**இயைபு**:இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
வைத்தான் - ஈசன்
**சந்த நயம்**:பாரதியாரின் இப்பாடல் ‘ நாட்டுப்புறச் சிந்துப்பாவில்’ அமைந்துள்ளது.
**அணி நயம்**: கவிஞரின் பாடலானது உயர்வு நவிற்சி அணியில் அமைந்துள்ளது.
.

**3. நயம் பாராட்டுக**

“தண்டலை மயில்கள் ஆட, தாமரை விளக்கம் தாங்க
கொண்டல்கள் முழவின் ஏங்க, குவளைகண் விழித்து நோக்க,
தெண் திரை எழினி காட்ட, தேம்பிழி மகர யாழின்
வண்டுகள் இனிது பாட, மருதம் வீற்றிருக்கும் மாதோ”. - கம்பர்
**மையக் கருத்து:** இயற்கை அன்னையை வியந்து போற்றும் கம்பர் மருத நாயகியாக உரைக்கின்றார்.

**மோனை**:செய்யுளில் அடிதோறும் அல்லது சீர் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை.
தண்டலை -தாமரை
கொண்டல்கள்– குவளை

**எதுகை**:இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை.
தண்டலை - கொண்டல்கள்
தெண்திரை - வண்டுகள்

**இயைபு**:இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
தாங்க - நோக்க

**சந்த நயம்**:கம்பரின் இப்பாடலானது‘அறுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில்’ அமைந்துள்ளது
.
**அணி நயம்**:கவிஞரின் இப்பாடலானது ‘உயர்வு நவிற்சி அணியில்’ அமைந்துள்ளது.

**4. நயம் பாராட்டுக**

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுதம்தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதம்தரும் பெருமையும் பணம் தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதம் தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால்தான்
நிதம் தரும் துயர்களை நிமிர்ந்துநின்றெதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்..
- நாமக்கல் கவிஞர்.

**மையக் கருத்து** ;சுதந்திரம் பெறுவதால் ஏற்படும் நன்மைகளையும் சுதந்திரத்தின் முக்கியத்துவம் பற்றியும் இப்பாடலில் கவிஞர் எடுத்துரைக்கிறார்.

**மோனை நயம்**:முதல் எழுத்து ஒன்றி வரத் தொடுப்பது மோனை
சுதந்திரம் - சுகம்தரும்
பதந்தரும் - பார்த்தாள்

**எதுகை நயம்**:இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை
சுதந்திரம் - பதம்தரும்

**இயைபு நயம்:**இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு
.காட்டிலும் - போகமும்

**சந்த நயம்:**கவிஞரின் இப்பாடலானது ‘எழுசீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தத்தில்’ அமைந்துள்ளது.

**அணிநயம்:**கவிஞரின் இப்பாடல் ‘இயல்பு நவிற்சி அணியில்’ அமைந்துள்ளது.

**5. நயம் பாராட்டுக**



செந்நெலும் கரும்பும் விளைந்தனவே – நல்ல
தேன்பொழி மலர்களும் விரிந்தனவே
இன்னலும் பசியும் போயொழிக- தேசம்
எழிலுடன் கூடியே நலமுறுக
பிரிவுகள் பேசியே பூசலிட்ட- பழம்
பேதமை தனைத்தள்ளி அனைவருமே
ஒரு தனிக் குடும்பமாய் வாழ்ந்திடுவோம்- நம்முள்
ஒற்றுமை ஓங்கிடச் செய்திடுவோம்.

பெ.தூரன்

**மையக் கருத்து:**மக்கள் அனைவரும் பேதமைகளை நீக்கி ஒரே குடும்பமாய் வேற்றுமை கொள்ளாது வாழ வேண்டும்.

**மோனை நயம்**: முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை
பேசியே -பேதமை
விளைந்தனவே - விரிந்தனவே

**எதுகை நயம்**: இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை
தனைத்தள்ளி - அனைவருமே

**இயைபு நயம்:** இறுதி எழுத்து ஒன்றி வருவது இயைபு.
விளைந்தனவே - விரிந்தனவே
வாழ்ந்திடுவோம் - செய்திடுவோம்

**சந்த நயம்:** கவிஞரின் இப்பாடலானது ‘நாட்டுப்புறச் சிந்துப்பாவில்’ அமைந்துள்ளது.

**அணிநயம்:**கவிஞரின் இப்பாடலானது ‘உயர்வு நவிற்சி அணியில்’ அமைந்துள்ளது.

## இலக்கணக்குறிப்பு அறிக

1. செங்கயல் - பண்புத்தொகை
2. தாவி,வந்து - வினையெச்சம்
3. காட்டல் - தொழிற்பெயர்
4. கேட்போர் - வினையாலணையும் பெயர்
5. நன்றுநன்று - அடுக்குத்தொடர்
6. மாநகர் - உரிச்சொற்றொடர்
7. ஓதுக - வியங்கோள் வினைமுற்று
8. அறிவும் ஒழுக்கமும் - எண்ணும்மை
9. காலதச்சன் - உருவகம்
10. தவமும் ஈகையும் - எண்ணும்மை
11. பேசிடுக - வியங்கோள் வினைமுற்று
12. நனி இகக்கும் - உரிச்சொற்றொடர்
13. உழுதுழுது – அடுக்குத்தொடர்
14. புதுக்கியவர் - வினையாலணையும் பெயர்
15. ஒழிதல் - தொழிற்பெயர்
16. விரிகதிர் - வினைத்தொகை
17. மாண்ட - பெயரெச்சம்
18. தீம்பால் - பண்புத்தொகை

19. அலைகடல் - வினைத்தொகை
20. சுடரும் பொன் - பெயரெச்சம்
21. தெண்டிரை - பண்புத்தொகை
22. அறிவும் ஒழுக்கமும் - எண்ணும்மை
23. கொல்புலி - வினைத்தொகை
24. பெரும்புகழ் - பண்புத்தொகை

## பகுபத உறுப்பிலக்கணம்

**1.தோன்**றி

தோன்று+ இ
தோன்று - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**2. செய்க**

செய்+க
செய் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**3. துஞ்சல்**

துஞ்சு +அல்
துஞ்சு- பகுதி
அல் - தொழிற்பெயர் விகுதி

**4.. ஈன்ற**

ஈன்+ற்+அ

ஈன்- பகுதி
ற் - இறந்தகால இடைநிலை
அ- பெயரெச்ச விகுதி

**5. வாழ்வான்**

வாழ் + வ்+ ஆன்
வாழ்- பகுதி
வ் - எதிர்கால இடைநிலை
ஆன்- ஆண்பால் வினைமுற்று விகுதி

**6. பெற்ற**

பெறு (பெற்று) +அ
பெறு - பகுதி
பெற்று – என இரட்டித்து இறந்தகாலம் காட்டியது
அ- பெயரெச்ச விகுதி

**7.ஏகுமின்**

ஏகு+ மின்
ஏகு- பகுதி
மின் - ஏவல் பன்மை வினைமுற்று விகுதி

**8. வருகிறார்**

வா (வரு)+ கிறு+ஆர்
வா - பகுதி
வரு- என மாறியது விகாரம்
கிறு - நிகழ்கால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

தமிழ்

**9. மெலிந்து**

மெலி+ த்( ந்)+ த்+உ
மெலி - பகுதி
த்- சந்தி
ந் - ஆனது விகாரம்
த்- இறந்தகால இடைநிலை
உ - வினையெச்ச விகுதி

**10. வைத்தார்**

வை + த் + த்+ ஆர்
வை- பகுதி
த் - சந்தி
த்- இறந்தகால இடைநிலை
ஆர் - பலர்பால் வினைமுற்று விகுதி

**11. மலிந்த**
மலி+த்(ந்)+த் +அ
மலி - பகுதி
த்- சந்தி
ந் - ஆனது விகாரம்
த்- இறந்தகால இடைநிலை
அ- பெயரெச்ச விகுதி

**12. இரங்கி**
இரங்கு + இ
இரங்கு - பகுதி
இ - வினையெச்ச விகுதி

**13. ஆழ்க**
ஆழ்+ க
ஆழ் - பகுதி
க - வியங்கோள் வினைமுற்று விகுதி

**14. செய்வான்**
செய்+வ்+ ஆன்
செய் - பகுதி
வ்- எதிர்கால இடைநிலை
ஆன்- ஆண்பால் வினைமுற்று விகுதி

## புணர்ச்சி விதி

**1.புகழெனின்**

புகழ்+ எனின்
'உடல்மேல்உயிர்வந்து ஒன்றுவது இயல்பே' என்ற விதிப்படி புணர்ந்தது.

**2. பொதுச்சிறப்பு**
பொது + சிறப்பு
'இயல்பினும் விதியினும் நின்ற உயிர் முன் க ச த ப மிகும்' என்ற விதிப்படி புணர்ந்தது.

**3.சிறுகோல்**

சிறுமை + கோல்
‘ஈறுபோதல்’என்றவிதிப்படி புணர்ந்தது.

**4. நீரோடை**

நீர் +ஓடை
‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’.

**5.அருவினை**
அருமை + வினை
‘ஈறுபோதல்’ என்ற விதிப்படி புணர்ந்தது.

**6. செங்கயல்**

செம்மை+ கயல்
‘ஈறுபோதல்’,‘முன் நின்ற மெய் திரிதல்’.

**.7. இழுக்கின்றி**
இழுக்கு + இன்றி
‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’.
‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே.’

**8. அரும்பொருள்**
அருமை+ பொருள்
‘ஈறுபோதல்’‘இனமிகல்’

**9. செங்கதிர்**

செம்மை +கதிர்
‘ஈறுபோதல்’, ‘முன் நின்ற மெய் திரிதல்’

**.10. திருப்புகழ்**
திரு + புகழ்
‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதபமிகும்’.

**11. திரைப்படம்**
திரை +படம்
‘இயல்பினும் விதியினும் நின்ற உயிர்முன் கசதப மிகும்’.

**12. பயமில்லை**
பயம் +இல்லை
‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’.

**13. உயர்ந்தோங்கும்**

உயர்ந்து +ஓங்கும்
‘உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்’.
‘உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே’.

**14. கருவிழி**

கருமை+விழி
'ஈறுபோதல்' என்ற விதிப்படி புணர்ந்தது.

**15. உலகனைத்தும்**
உலகு + அனைத்தும்
'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்'.
'உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே'

## தமிழாக்கம் தருக

1. The pen is mighter than the sword.

வாள் முனையை விட பேனாமுனை வலிமையானது.

2. Winners don't do different things they do things, differently

வெற்றியாளர்கள் மாறுபட்ட செயலைச் செய்ய மாட்டார்கள். ஆனால், செயல்களை வித்தியாசமாக செய்வார்கள்.

3. A picture is worth a thousand words.

ஆயிரம் சொற்களை விட ஒரு படம் சிறந்தது.

4. Work while you work and play while you play.

காலத்தே பயிர் செய்.

5. Knowledge rules the world.

அறிவே உலகை ஆளும்.

6. Just living is not enough one must have sunshine freedom and a little flower.

வாழ்வது போதுமானதன்று. சூரியனைப் போல பிரகாசமாகவும் ,சுதந்திரமாகவும் பூவின் மணம் போலவும் வாழ வேண்டும்.
7. In nature light creates the colour in the picture colour creates the light.

இயற்கையில் ஒளி வண்ணங்களைப் படைக்கும்; படங்களில் வண்ணங்கள் ஒளியை உண்டாக்கும்.

8. Look deep into nature and then you will understand everything better.

இயற்கையை உற்று நோக்கினால் அனைத்தையும் நன்றாக புரிந்து கொள்ள முடியும் .

9. Simplicity is nature's first step and the last of art.

எளிமையே இயற்கையின் முதல் படியும் கலையின் இறுதியுமாகும்.

10. Roads were made for journeys not destinations.

சாலைகள் பயணங்களுக்கே அன்றி இலக்குகளுக்கானவை அல்ல

11. Education is the most powerful weapon which you can use to change the world.
கல்வி வலிமையான ஆயுதம் அதனைப் பயன்படுத்தி இவ்வுலகையே மாற்றலாம்.

12. Looking at beauty in the world is the first step of purifying the mind.

உலகில் உள்ள அழகை உற்று நோக்குவதே மூளையைத் தூய்மைப்படுத்துவதற்கான முதல் முயற்சியாகும்.
13. Culture does not make people people make culture.

பண்பாடு மக்களை உருவாக்காது; மக்கள்தான் பண்பாட்டை உருவாக்குகிறார்கள்.

14. A people without the knowledge of their past history and culture is like a free without roots.

தன் முன்னோரின் வரலாற்றையும் பண்பாட்டையும் அறியாத மக்கள் வேரற்ற மரம் போல.

15. A nations culture resides in the hearts and in the soul of it is people.

ஒரு நாட்டின் பண்பாடு அந்நாட்டு மக்களின் உள்ளத்திலும் ஆன்மாவிலும் தங்கியுள்ளது.

16. An eye for an eye only ends up making the whole world blind.

கண்ணுக்கு கண் என்னும் வன்முறைச் சிந்தனை உலகை இருளாக்கிவிடும்.

17. You must be the change you wish to see in the world.

உன் எண்ணம்போல் உலகம் மாறுவதற்கு, நீ மாற வேண்டும்.

18. The weak never forgive forgivess is the attribute of the strong.

வலிமையற்றவர்கள் ஒருபோதும் பிறர் தீமையை மன்னிப்பதில்லை வலிமையானவர்களுக்கு மன்னிப்பு இயல்பான குணமாக உள்ளது.

19. Nobody can hurt me without my permission.
என் அனுமதி இல்லாமல் யாரும் என் மனதை காயப்படுத்த முடியாது.

20. You must not loss faith in humanity is an ocean if a few drops of the ocean are dirty the ocean does not became dirty.

நீங்கள் மனித பண்பில் கொண்டுள்ள நம்பிக்கையை இழந்து விடாதீர். மனிதநேயம் ஒரு பெருங்கடலாகும். ஒரு சில தூய்மையற்ற துளிகள் கலக்கின்ற போது கடல் முழுவதும் தூய்மைக் கேடு அடைவதில்லை.

## பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.

**1.சிறுதுளி பெரு வெள்ளம்**
**பழமொழி விளக்கம்;**
சிறுசிறு துளியாகச் சேரும் பொழுது தான் நீர் பெருவெள்ளமாக மாறுகின்றது.
**வாழ்க்கை நிகழ்வு:**

பள்ளி மாணவனான விமல் நீண்ட நாட்களாக தனக்கு ஓர் தமிழகராதி வாங்க எண்ணினான். அதற்கான பணத்தைத் தன் பெற்றோரிடம் வாங்காமல் சிறுகச் சிறுகச் சேர்க்க எண்ணினான். ஒவ்வொரு முறையும் தன் தாத்தா, பாட்டி என உறவினர்கள் அனைவரும் திருவிழா, பிறந்தநாள் எனத் தருகின்ற சிறு தொகையையும் சேமித்தான். தன்னுடைய எந்தத் தேவைக்கும் அத்தொகையில் இருந்து எடுக்கவில்லை. பணம் சேர்ந்த பிறகு கடைக்குச் சென்று தமிழகராதியை வாங்கினான். அகராதியின் மூலம் பொருள் தெளிவு பெற்றான். தொடக்கத்தில் சிறு தொகையாக இருந்தவை பின்னர் பெருந்தொகையாக மாறி தேவைக்கேற்ப பயனுள்ளதாக மாற்றம் பெற்றது.

**நீதி:**
எது ஒன்றாக இருந்தாலும் சிறுகச் சிறுகச் செய்யும் பொழுது அதன் பெரும் பயனை அடைய முடியும்.

**2. சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும்**
**பழமொழி விளக்கம்:**
விளக்கு எரிந்து கொண்டே இருக்கும் என்று இருந்து விடக் கூடாது.திரி எரிய எரிய ஒளிமங்கும். திரியைத் தூண்டினால் ஒளி பிரகாசிக்கும். அதுபோல் திறமை மிக்கவர்களுக்கு வழிகாட்டுதல் நல்ல பயன் தரும்.

**வாழ்க்கை நிகழ்வு**:

கண்ணன் பிறந்த குடும்பம், வறுமையில் வாடியது. படிக்க வேண்டும் என்பதில், அவன் ஆர்வமாக இருந்தான். குடும்பச் சூழல் ஆர்வத்திற்குத் தடை விதித்தது. அவனுடைய ஆர்வத்தைக் கண்ட. அவன் வகுப்பு ஆசிரியர் அவனை ஊக்கப்படுத்தினார். காலையில் சில வீடுகளுக்குச் செய்தித்தாள் போடுதல் , பால் வாங்கிக் கொடுத்தல் போன்ற செயல்களைச் செய்து சிறிதளவு பணம் சம்பாதிக்க வழி செய்தார். பிறரிடம் கையேந்தாமல் உழைத்துப் பொருள் தேடி வாழ வழி செய்தார். நன்றாக படிப்பதற்கும் வழிகாட்டினார். கண்ணன் விடாமுயற்சியுடன் செயல்பட அவன் ஆசிரியர் வழிகாட்டினார். படித்து நல்ல மதிப்பெண் பெற்று , வாழ்வில் உயர்வடைந்தான். சுடர் விளக்காயினும் தூண்டுகோல் வேண்டும் என்பது கண்ணன் வாழ்வில் உண்மை ஆயிற்று.



**நீதி**:

மாணவர்கள் எவ்வளவு நுண்ணறிவு பெற்றிருந்தாலும் அவர் வளர்ச்சிக்கு உதவி செய்ய ஆசிரியர் தேவை என்பதை இப்பழமொழி மூலம் உணரலாம்.

### 3. சிறு துரும்பும் பல் குத்த உதவும்

**பழமொழி விளக்கம்**:

எந்த ஒரு சிறிய செயலும் பயனுள்ளதாக அமையும் என்பதனை உணர வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு**:

என் தோழி மணிமேகலை ஓரளவு படிக்கும் மாணவி. தினந்தோறும் வகுப்பறையில் வீணாகக் கிடக்கும் காகிதங்களை எடுத்துச் செல்வாள். நான் ஒரு நாள் அவளிடம் இந்த குப்பைகளை எதற்குச் சேகரித்துச் செல்கிறாய் என்று அவளை கிண்டல் செய்ததுண்டு. ஆனால் அவள் அதையெல்லாம் பொருட்படுத்தவே இல்லை.

ஒரு நாள் பள்ளியில் தலைமையாசிரியர் நம் பள்ளியில் கழிவுப் பொருட்களில் இருந்து புதிய படைப்புகள் உருவாக்கும் கண்காட்சி நடைபெறும் என்று அறிவித்தார். ஒவ்வொரு மாணவரும் வீணான பொருட்களைத் தேடி அலைந்து சேர்த்தனர். கண்காட்சி தொடங்கியது. மணிமேகலை காகிதக் கூழினால் செய்த ஒரு மனிதச் சிலையைக் கண்காட்சியில் வைத்தாள். அச்சிலை முதல் பரிசை வென்றது. தினம் தினம் சேகரித்த காகிதத் துண்டுகளை தண்ணீரில் ஊற வைத்து அதில் வடித்த மனித உருவச் சிலை கண்டு பூரித்துப் போனேன்.

**நீதி**:

எந்த ஒரு பொருளும் ஏதாவது ஒரு சமயத்தில் பயன்படும் என்பதை இப்ப பழமொழி மூலம் உணரலாம்.

### 4. கூடி வாழ்ந்தால் கோடி நன்மை

**பழமொழி விளக்கம்**:

தனி ஒருவனால் சாதிக்க முடியாத பல காரியங்களைக் கூட்டு முயற்சியினால் வெற்றி பெற செய்ய முடியும்.

**வாழ்க்கை நிகழ்வு**:

ஒரு ஊரில் பல சமயத்தார்கள் ஒன்று கூடி வாழ்ந்து வந்தார்கள். நல்லது கெட்டது என எது நடந்தாலும் ஒற்றுமையுடன் செயல்படுவார்கள். சில காரணங்களுக்காக அவர்களிடம் வாய்ச் சண்டை உருவானது. அச்சண்டை பெரிதாகி ஒருவருக்கொருவர் பகையாளியாக மாறிவிட்டனர். இவர்களைப் பார்த்து பக்கத்து கிராமத்தில் உள்ளவர்கள் எல்லாம் இவர்களைத் தாழ்வாக நினைத்தனர். அடிக்கடி வழக்கு, காவல் நிலையம், நீதிமன்றம் என்று அலைந்தனர். நேரம், பணம் எல்லாம் வீணானது. பிறகு ஒவ்வொரு சமயத்தவரும் தம் நிலையைத் தெரிந்து கொண்டு, நாம் ஒற்றுமையுடன் இருந்தால்தான் வாழ்வில் செம்மை அடைவோம் என்று சொல்லி ஒற்றுமையுடன் வாழ்ந்தார்கள்.

**நீதி**:

ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக்கு ஏற்ப அனைவரும் ஒற்றுமையுடன் வாழ்ந்தால் பல சாதனைகள் புரியலாம் என்பது கருத்து ஆகும்.

### 5. தன் கையே தனக்கு உதவி

**பழமொழி விளக்கம்**:
பிறர் உதவியை எதிர்பார்க்காமல் நம் பணியை நாம் இயன்றவரை செய்து பழக வேண்டும்.

**வாழ்க்கை நிகழ்வு**:

நானும் என் அண்ணனும் ஒன்றாக மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்வோம். எனக்கு மிதிவண்டி ஓட்டத் தெரியாது. ஒவ்வொரு நாளும் அண்ணனை எதிர்பார்த்து தான் நான் செல்ல வேண்டும். ஏனெனில் எங்கள் பள்ளி சற்று தொலைவில் இருந்தது. எங்களுக்குக் காலாண்டு தேர்வு தொடங்கியது. அப்பொழுது என் அண்ணனுக்கு எதிர்பாராத விதமாக உடல் நலக்குறைவு ஏற்பட்டு பள்ளிக்கு வர இயலவில்லை. மிதிவண்டி ஓட்டத் தெரியாத காரணத்தால் ஒவ்வொரு நாளும் நான் நடந்து பள்ளிக்குச் செல்லும் நிலை ஏற்பட்டு, மிகவும் சிரமம் அடைந்தேன். இதன் காரணமாக அந்த காலாண்டு விடுமுறையிலேயே மிதிவண்டி ஓட்ட பழகிக் கொண்டேன். தற்பொழுது சிரமம் ஏதுமின்றி பள்ளிக்குச் சென்று வருகிறேன்.

**நீதி:**
பிறரை எதிர்பார்க்காமல் நாமே நம் பணிகளைச் செய்யும் போது தாமதம் இன்றி செம்மையாகச் செய்ய முடியும்.

### 6. கற்றோர்க்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு.

**பழமொழி விளக்கம்:**
கற்றோர்க்கு தனது நாடும் ஊருமே அல்லாமல், எந்த நாடும் ஊரும் தன்னுடைய ஊராகும்.

**வாழ்க்கை நிகழ்வு:**
எழிலன் தன் பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவர்களுடைய குடும்பத்தொழில் விவசாயம். அவன் தந்தை வேளாண்மை செய்ய படிப்பு அவசியம் இல்லை எனக் கருதி எழிலன் படிப்பினை பத்தாம் வகுப்போடு நிறுத்த எண்ணினார். ஆனால், எழிலனோ கற்பதில் ஆர்வம் மிக்கவன். தந்தையின் எண்ணப் போக்கை அறிந்து, அவரிடம் பிடிவாதமாக படிக்க வேண்டும் என்று வலியுறுத்தி பள்ளிப்படிப்பை முடித்தான். பின்பு இளங்கலை விவசாயம் பயின்றான். தன் சொந்த நிலத்தில் வேதிக் கலப்பில்லாத விவசாயத்தை மேற்கொண்டான். பல புதிய வேளாண் உத்திகளைக் கையாண்டு மாநில அரசிடம் பரிசுகளைப் பெற்றான். தான் கற்ற கல்வியின் பயனால் பலரால் பாராட்ட பெற்றான்.

**நீதி:**
கற்றவர்கள் எத்தொழிலைச் செய்தாலும் அதில் வெற்றியும் புகழும் கிடைக்கும். எந்நாட்டிற்குச் சென்றாலும் அவர்கள் கற்ற கல்வியின் பயனால் அவர்களுக்குச் சிறப்பு உண்டாகும்.

### 7. உழைப்பே உயர்வு தரும்

**பழமொழி விளக்கம்:**
நாம் முயற்சிவுடன் உழைக்கும் போது வெற்றி நமக்கு கிடைத்தே தீரும்.

**வாழ்க்கை நிகழ்வு:**
உழைப்பில்லாமல் எந்த ஒரு நல்ல நிகழ்வும் வாழ்வில் நடைபெறாது.
தாமஸ் ஆல்வா எடிசன் அவர்கள் ஒரு நாளில் 21 மணி நேரம் தன் ஆய்வகத்திலேயே கழித்தவர். ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளை நமக்குத் தந்தவர். ஆராய்ச்சியின் போது தோல்வி ஏற்பட்டாலும் விடாமுயற்சியுடன் தொடர்ந்து அதில் வெற்றியைக் கண்டவர். இன்று ஒவ்வொரு வீடும் இருளின்றி ஒளியுடன் விளங்கக் காரணம் எடிசன் அவர்கள் கண்டுபிடித்த மின்விளக்குகள் தான். அவரின் கடின உழைப்பால் இன்றளவும் உலகம் போற்றும் விஞ்ஞானியாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறார்.

**நீதி:**
கடின உழைப்பு தனக்கு மட்டுமல்ல. தான் சார்ந்த சமூகத்திற்கும் பயன் தரும் என்பதை நாம் உணர்கிறோம்.

**8. இக்கரைக்கு அக்கரை பச்சை**

**பழமொழி விளக்கம்:**
தூரத்தில் இருந்து பார்க்கும்போது எல்லாம் அழகாகத் தான் இருக்கும். அருகில் சென்று பார்த்தால் தான் அதன் உண்மை தெரியும்.

**வாழ்க்கை நிகழ்வு:**
என் தோழியின் தந்தை சொந்த நாட்டில் இருப்பதைவிட அயல்நாடு சென்றால் நன்றாக பணம் சம்பாதிக்கலாம், மகிழ்ச்சியாக வாழலாம் என்று வெளிநாடு சென்று விட்டார். அங்கு சென்ற பின் சில நாட்கள் அவருக்கு எல்லாம் புதுமையாகவும் வித்தியாசமாகவும் இருப்பதாகத் தோன்றியது. நாட்கள் செல்லச் செல்ல குடும்பத்தைப் பிரிந்து இருப்பதன் வருத்தம் அவருக்குப் புரிய தொடங்கியது. மாறுபட்ட உணவுப் பழக்கத்தால் உடல் நலமும் பாதிக்கப்பட்டது. இதனால் எப்போது தன் சொந்த நாட்டிற்கு செல்வோம் என்றானது அவருக்கு. தன் நாட்டிலேயே ஊதியம் குறைவாக இருந்தாலும் போதும், குடும்பத்தோடு வாழ்வதே மகிழ்ச்சி என்று நாடு திரும்பினார்.

**நீதி:**
எப்போதுமே நம் கண்கள் அருகில் இருக்கும் சிறந்த பொருட்களைக் காணத் தவறி விடும். தூரத்தில் இருப்பதை நாடி ஓடிவிடும். அங்கு சென்று பார்த்த பின்தான் அதன் உண்மைத் தெரியும். இருப்பதை வைத்து மகிழ்வோடு வாழ வேண்டும்.

**9. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்**

**பழமொழி விளக்கம்:**
ஒருவனது உள்ளத்தின் தன்மை அவனது முகத்திலேயே தெரிந்து விடும்.

**வாழ்க்கை நிகழ்வு:**
12 - ஆம் வகுப்பு கணித ஆசிரியர் சில கணக்குகளை வீட்டுப்பாடமாகச் செய்து வரச் சொன்னார். மறுநாள் வகுப்பில் உள்ள மாணவர்கள் தாங்கள் செய்து வந்த பயிற்சி ஏடுகளை ஆசிரியரின் மேசை மேல் அடுக்கி வைத்தனர். நிலவன் என்ற மாணவன் மட்டும் தலையை குனிந்து கொண்டு அமர்ந்திருந்தான். கணித ஆசிரியர் அவனது முகத்தைப் பார்த்து நிலவா! நீ ஏன் ஒரு மாதிரியாக இருக்கிறாய்? எனக் கேட்டார். அதற்கு அவன் ஐயா! நேற்று இரவு என் பெற்றோர் இருவருக்கும் ஏதோ சண்டை. அதன் காரணமாக என் மனம் சரியில்லை. அதனால் நான் வீட்டுப்பாடம் செய்யவில்லை ஐயா! என்றான். ஆசிரியரும் புரிந்துகொண்டு 'உன் மனம் சரியில்லை என்பதை உனது முகமே காட்டிவிட்டது' என்று ஆறுதல் படுத்தி ஊக்கப்படுத்தினார்.

**நீதி:**
நற்குணம் முகத்தை மலர்ச்சியுடன் காட்டும். மன வேறுபாட்டை முகம் காட்டிக் கொடுத்து விடும்.

## குறுவினா - செய்யுள்

**1. பாயிரம் பற்றி நீங்கள் அறியும் கருத்து யாது?**

நூலை உருவாக்கும் ஆசிரியரின் சிறப்பையும், அந்நூல் வழங்கும் கருத்து வளத்தையும் தொகுத்து நூல் முகப்பில் வைக்கும் முறை பற்றி பேசுவது பாயிரம் ஆகும். இது பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம் என இரு வகைப்படும்.

**2. இனம், மொழி குறித்த இரசூல்கம்சதோவ் பார்வையை குறிப்பிடுக**.

தன் இனத்தையும் மொழியையும் பாடாத கவிதை, வேரில்லாத மரம்; கூடில்லாத பறவை என்று இரசூல்கம்சதோ**வ்** கூறுகிறார்.

**3. ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின - தொடரின் பொருள் யாது?**
மரங்கள் வெட்டப்பட்டன, மழை பொய்த்தது, மண்வளம் குன்றியது. எனவே வாழும் சூழல் இல்லாததால் ஏதிலியாய் குருவிகள் எங்கோ பறந்து போயின.

**4. காற்றின் தீராத பக்கங்களில் எது எதனை எழுதி சென்றது?**
காற்றின் தீராத பக்கங்களில், சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் சென்றது.

**5. காவடிச்சிந்து என்பது யாது?**
தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசைமரபே காவடிச்சிந்து எனப்படும்.

**6. குறுந்தொகை குறித்து நீங்கள் அறியும் செய்தி யாது?**

குறுந்தொகை எட்டுத்தொகை நூல்களில் ஒன்று.
உரையாசிரியர்கள் பலராலும் அதிகமாக மேற்கோள் காட்டப்பட்ட நூல்.
அகத்திணைச் சார்ந்த 401 பாடல்களைக் கொண்டது.
குறுந்தொகையைத் தொகுத்தவர் பூரிக்கோ.

**7. தமிழர்கள் புகழ் பலி ஆகியவற்றை எவ்வாறு ஏற்றதாக புறநானூறு கூறுகிறது?**

புகழ் - தம் உயிரையும் கொடுப்பர்.
பழி - உலகம் முழுவதும் கிடைத்தாலும் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**8. சீர்தூக்கி ஆராய வேண்டிய ஆற்றல்கள் யாவை?**

செயலின் வலிமை, தன் வலிமை, பகைவர் வலிமை, துணையாளர் வலிமை.

**9. இங்கே ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள் எண்ணச் சொல்கிறவர்கள் யார்? எண்ணுபவர்கள் யார்?**
எண்ணச் சொல்பவர்கள் -ஆசிரியர்கள்
எண்ணுபவர்கள்– மாணவர்கள்

**10. மதினா நகரம் ஒரு மாளிகை நகரம் என்னும் கூற்றினை உறுதிப்படுத்துக**.
மதினா நகரில் மாளிகைகள் சிறிதும் இடைவெளி இன்றி நெருக்கமாக இருந்தன.
அம்மாளிகைகள் மேருமலையினைப் போன்று உயர்ந்து இருந்தன.
வீதிகள் பேரண்டம் போல பரந்திருந்தன.

**11. ஊனமில் ஊக்கமும் ஒளிரக் காய்ந்த நல்**
**தீன்எனும் செல்வமே பழுத்த சேணகர் - இப்பாடலடிகளில் ஒளிரக் காய்த்தது எது?**
**பழுத்தது எது**?

ஒளிரக் காய்ந்தது - குறைவற்ற ஊக்கம்
பழுத்தது - ‘ தீன்’ என்னும் செல்வம்.

**12. மருத்துவத்தின் பிரிவுகளாக குறள் கூறுவன யாவை?**

நோயாளி, மருத்துவர் ,மருந்து, மருந்தாளுநர்.

**13. உழைப்பாளர்களின் தோள் வலிமையால் விளைந்தன யாவை?**

ஓடி வருகின்ற ஆற்று நீரைத் தடுத்து குளம், குட்டை, ஏரிகளை அமைத்தனர்.
நீரைக்கொண்டு வாய்க்கால் வெட்டினர்.
தரிசு நிலத்தில் வரப்பெடுத்து உழுது விளைவித்தனர்.

**14. செந்துறைப் பாடண்பாட்டு துறை விளக்கம் தருக.**

உலகினுள் இயற்கை வகையான் இயன்ற மக்களைப் பாடுவது செந்துறைப் பாடண்பாட்டுஆகும்.

**15.ஒழுக்கமும் பொறையும் உனைப்போல் யார்க்குள இவ்வடி எதனைக் குறிப்பிடுகிறது?**

நாங்கூழ்**ப்** புழுவின் தன்னலமற்ற உழைப்பைக் குறிப்பிடுகிறது.

## குறுவினா - உரைநடை

**1. பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது ஏன்?**

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு அருகில் உள்ளது. எழுதுவதை மட்டும் தான் கை செய்கிறது. கையைக் காட்டிலும் பேசும் வாய் உணர்ச்சி வெளிப்பாட்டை தெரிவிப்பதாக அமைந்துள்ளது. எனவே, பேச்சுமொழி எழுத்துமொழியைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி மிக்கது.

**2. தமிழ்நாட்டின் மாநில மரம் சிறு குறிப்பு வரைக.**

தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம்.
ஏழைகளின் கற்பக விருட்சம்.
சிறந்த காற்றுத் தடுப்பான்.
நிலத்தடி நீர்மட்டத்தைக் குறையாமல் பாதுகாக்கும்.

**3. ‘கோட்டை’ என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

மலையாளம்- கோட்ட, கோடு
கன்னடம் – கோட்டே, கோண்டே
தெலுங்கு- கோட்ட
துளு – கோட்டே

**4. ஆனந்தரங்கரின் வருணனைத் திறனுக்கு ஓர் எடுத்துக்காட்டு தருக.**
நஷ்டப்பட்ட திரவியம் மீண்டும் கிடைத்தாற்போலவும்,
மரணமுற்ற உறவினர்கள் உயிர்பெற்று எழுந்து வந்தது போலவும்,
நீண்டநாள் தவமிருந்து புத்திரப்பாக்கியம் கிட்டினாற் போலவும்,
தேவாமிருதத்தைச் சுவைத்தது போலவும் மக்கள் சந்தோஷித்தார்கள்.

**5. இந்திய கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?**

நாகரம்,வேசரம்,திராவிடம்.

**6. நாழிக்குள் திணிக்கும் மருந்து போல் என்னும் உவமையை ஜீவானந்தம் பேச்சுடன் ஒப்பிடுக?**

வாண வேடிக்கைக்காரன் நாழிக்குள் திணிக்கும் மருந்து போல் இரண்டு கைப்பிடி விசயம்தான் எடுத்துக் கொள்வார்.
மேடையில் ஏறிஅதற்கு நெருப்பு வைத்ததும் அதிலிருந்து வர்ணஜாலங்கள் தோன்றும்; பச்சையும் சிவப்பும் மஞ்சளும் உதிரும்; குடை குடையாய் இறங்கி வரும்; மாலைமாலையாய் இறங்கி வரும்.

**7. நாட்டுப்புறத்திலும் பட்டணத்திலும் சிறந்து விளங்குவதாக தாகூர் எவற்றைக் கூறுகிறார்?**

நாட்டுப்புறம் - இயற்கையே சிறந்து விளங்குகிறது
பட்டணம் - மனித சமுதாயம்

## இலக்கணம்

**1. மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

மொழிக்கு முதலில் வரும் எழுத்துகள் மொத்தம் -22
உயிர் எழுத்துகள் - 12
மெய்யெழுத்துகள் – 10

**2.மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் எத்தனை? அவை யாவை?**

மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகள் மொத்தம் -24
உயிர் எழுத்துகள் - 12
மெய்யெழுத்துகள் – 11
குற்றியலுகரம் - 1

**3. உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?**

வினை
பயன்
வடிவம் ( மெய் )
நிறம் (உரு )

**4. ஈரசைச் சீர்களுக்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் யாவை?**
மாச்சீர், விளச்சீர், இயற்சீர்

**5. கலைச்சொல்லாக்கம் பொருள் தருக.**

கலைச்சொல்லாக்கம் என்பது பொருள் தெரிந்த பிறமொழிச் சொற்களுக்குத் தாய்மொழியில் முன்பே உள் சொற்களை அடையாளம் காட்டுவதும் புதிதாக சொற்களை உருவாக்குவதும் ஆகும்.

**6.கலைச்சொல்லாக்கத்திற்கும் அகராதிக்கும் உள்ள வேறுபாடு யாது?**

கலைச்சொல்லாக்கம்- பொருள் தெரிந்த பிறமொழிச் சொல்லுக்கு நிகரான ஒரு சொல்லைத் தாய் மொழியில் அடையாளம் காட்டுவது. தேவையான விடத்துப் புதிதாகச் சொற்களை உருவாக்குவது.

.அகராதி - பொருள் தெரியாத சொற்களுக்குப் பொருள் கூறுவது.

**7. உயிரீறு, மெய்யீ று - விளக்குக**.
**உயிரீறு:**
நிலைமொழியின் இறுதி எழுத்து உயிர் மெய்யாக இருந்தாலும் இறுதியில் நிற்கும் வடிவம் உயிர் என்பதால் உயிரீறு ஆகும்.
எ.கா. மணி + மாலை
**மெய்யீ று:**
நிலைமொழியின் இறுதி எழுத்து மெய்யாக இருந்தால் மெய்யீ று ஆகும்.
எ. கா. தமிழ்+ அன்னை

**8. உயிர்முதல், மெய்முதல் - விளக்குக**
**உயிர்முதல்:**
வருமொழியின் முதல் எழுத்து உயிராக இருந்தால் உயிர்முதல் ஆகும்
எ. கா. தமிழ்+ அன்னை
**மெய்முதல்:**
வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய்யாக இருந்தாலும் முதலில் நிற்கும் வடிவம் மெய் என்பதால் மெய்முதல் ஆகும் .
எ.கா. மணி + மாலை

**9.பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?**
பகுபத உறுப்புகள் - ஆறு
பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

**10. ஆசிரியப்பாவிற்குரிய சீரும். தளையும் யாவை?**
சீர்: மாச்சீர் ,விளச்சீர்= இயற்சீர்
காய்ச்சீர்
தளை: நேரொன்றாசிரியத்தளை
நிரையொன்றாசிரியத்தளை

## சிறுவினா - செய்யுள்

**1. சு. வில்வரத்தினம் பாடத்தான் வேண்டும் என எவற்றைக் குறிப்பிடுகிறார்?**

தமிழர்களுக்கு ஏடு எடுத்து படிக்க அருள் புரிந்தவள்.
தமிழ்ப் பற்றாளர்களுக்கு இலக்கியச் செல்வங்களை அளித்தவள்.
எண்ணற்ற இலக்கிய இலக்கண வளங்களைக் கொண்டுள்ளவள்.
ஆழிப்பேரலை ,நெருப்பு முதலியவற்றைக் கடந்து வென்று நிற்பவள்.
இத்தகைய சிறப்புமிக்க தமிழ்த்தாயைப் போற்றிப் பாடத்தான் வேண்டும் என்று சு.வில்வரத்தினம் குறிப்பிடுகிறார்.

**2. காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு யாது? ஏன்?**

காற்றில் ஆடும் புல்வீடுகளுக்கு அழகிய பெரியவன் தரும் ஒப்பீடு **தூக்கணாங்குருவி கூடுகள்**.
பறவைகளின் கூடுகளில் மிகவும் அழகானது, நேர்த்தியானது, உறுதியானது தூக்கணாங்குருவி கூடு.
அதனால் ,தூக்கணாங்குருவி கூடுகளைக் காற்றில் ஆடும் புல் வீடுகளுக்கு ஒப்பீடாகக் காட்டுகிறார் அழகிய பெரியவன்.

**3. தமிழ்ப்பண்பாட்டின் அடையாளம் காவடிச்சிந்து என்பதை விளக்குக.**
தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கில் உள்ள இசைமரபே காவடிச்சிந்து எனப்படும்.
கடலில் வாழும் மீன் மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் முருகபெருமான் கோவிலில் பறக்கின்றன.
அடியவர்கள் பாடும் திருப்புகழ் முழக்கம் தேவர்களின் செவியைச் சென்றடைகிறது.
காவடியைத் தோளில் தூக்கிக்கொண்டு ஆடிப்பாடி முருகனிடம் வரும் பக்தர்கள் இன்பம் அடைகின்றனர்.
இத்தகைய தமிழ்ப் பண்பாடு சார்ந்த கருத்துக்களைத் தாங்கி நிற்கிறது காவடிச்சிந்து.
அதனால்தான் அண்ணாமலையார் பாடிய காவடிச்சிந்தை முருகன் தன் தோளில் அணிந்து கொள்கிறான்.

**4. புகழுக்குரிய பண்புகளாக நீவிர் கருதுவன யாவை? புகழின் பெருமையை பொதுமறை வழியில் நின்று நிறுவுக**.

**புகழுக்குரிய குணங்கள்:**
அடக்கத்துடன் வாழ்தல்,
பிறருக்கு உதவி செய்தல்,
எப்பொருளின் மீதும் பற்றற்று இருத்தல்,
வலிமையைப் பெருக்கி கொண்டு ,சரியான காலத்தில் செயல்பட்டு வெற்றி பெறுதல்.

**பொதுமறை கூறும் புகழின் பெருமை :**
புகழைப் போல நிலைத்து நிற்பது இவ்வுலகத்தில் வேறு ஒன்றும் இல்லை.
தோன்றினால் புகழ்தரும் பண்புகளோடு தோன்ற வேண்டும். இல்லையெனில் தோன்றாமல் இருப்பதே நன்று.
புகழோடு வாழ்பவரே வாழ்பவர். புகழ் இல்லாமல் வாழ்பவர் வாழாதவர்.

**5. மருந்து, மருத்துவர், மருத்துவம் ஆகியன பற்றி திருக்குறள் கூறுவன யாவை?**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று வேண்டியதில்லை.
மருத்துவர் என்பவர் நோயையும், அதன் காரணத்தையும் ,அதை நீக்கும் வழியையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும்.
நோயாளி, மருந்து, மருத்துவர், மருத்துவ உதவியாளர் என்று மருத்துவம் நான்கு வகையில் அடங்கும்.

**6. சிங்கி பெற்ற பரிசு பொருட்கள் பற்றி குற்றால குறவஞ்சி கூறுவன யாவை?**
சேலத்து நாட்டார் பரிசாகக் கொடுத்தது - சிலம்பு.
கலிங்க நாட்டார் பரிசாகக் கொடுத்தது - தண்டை.
பாண்டியன் மகளுக்குக் குறி கூறியதற்காக பரிசாக கிடைத்தது - பாடகம்.
குற்றாலநாதர் கோவிலில் குறி கேட்ட பெண்கள் கொடுத்தது - அணிமணிக்கெச்சம்.
கண்டிய நாட்டில் பரிசாக கிடைத்தது - காலாழிபீலி

**7. உணவும் உறக்கமும் அணில் கனவாம். உங்கள் கனவை உங்கள் சொற்களில் விளக்குக**.
சிறிய கனவை வைத்துக் கொண்டதால் அணில் மகிழ்வோடு விளையாடித் திரிகிறது.
என்னுடைய கனவோ பெரிது.
பள்ளி என்பது மாணவர்களைக் கவர்ந்திழுக்கும் பயிற்சி கூடமாக இருக்க வேண்டும். எப்பொழுது விடுமுறை என்று எண்ண வைக்க கூடாது.
தேர்வுமுறைகள் என் அறிவைப் பெருக்க உதவ வேண்டுமே தவிர, அழுத்தத்தைத் தரக்கூடாது.
பள்ளிக் கல்லூரிகளில் நான் படிப்பை முடித்தவுடன் படிப்புச் சான்றிதழோடு பணி நியமன ஆணையையும் வழங்க வேண்டும்.

எதிர்காலத்தைப் பற்றிய ஐயமோ! அச்சமோ! எனக்கு ஏற்படாதவாறு அரசின் செயல்பாடுகள் இருக்க வேண்டும்.
என் கனவு ஒருநாள் நிஜமாகும் என்ற நம்பிக்கையில் நான்.......

**8. வாய்க்காலின் சிறப்புகளாகக் குறிப்பிடப்படுவன யாவை?**
நமக்கு உணவு வழங்கப் பயன்படும் வயலுக்கு உதவும் வாய்க்கால் செய்கின்ற தொழில் வியப்பானது. கடலை மலையாகவும், மலையைக் கடலாகவும் புரட்டிப் போடுவதற்காக இந்தச் சிறுவாய்க்கால் ஓடுகின்றது.
இச்சிறு வாய்க்கால் சூரியனின் கட்டளையால் ஆவியாகி, பின்னர் மலையாகவும், அருவியாகவும் , சுனையாகவும், ஊற்றாகவும் மாற்று வடிவம் கொள்கிறது.
மீண்டும் மீண்டும் மேகமாக எழுந்து தன் வழக்கமான பயணத்தை இரவுப்பகல் பாராமல் தொடர்கிறது. வாய்க்காலைப் போல் ஊக்கத்தோடும் உறுதியோடும் உழைப்பவர் எவரும் இல்லை.



**9.'சலசவாவியில் செங்கயல் பாயும்' - இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.**

**இடம்**: இப்பாடலடி 'திருமலை முருகன் பள்ளு' என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் பெரியவன் கவிராயர்.

**பொருள்:** தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும்
.
**விளக்கம்**: வடகரை நாடாகிய திருமலையில் மலரில் மொய்க்கும் வண்டுகள் 'இந்தளம் 'என்ற பண்ணைப் பாடும். மீனைப்பிடித்து உண்பதற்காக வந்த உள்ளான் பறவை வண்டின் இசையைக்கேட்டு வாலை ஆட்டிக் கொண்டு அமர்ந்திருக்கும். தாமரைத் தடாகத்தில் மீன்கள் துள்ளிப் பாய்ந்து விளையாடும் எனப் பெரியவன் கவிராயர் பாடியுள்ளார்.

**10.'ஏவல் மறுக்கும் சிறுவிளையாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள்கொல்' இடம் சுட்டிப் பொருள் விளக்குக.**
**இடம்**: இப்பாடலடி நற்றிணையில் 110 வது பாடலில் இடம் பெற்றுள்ளது. இப்பாடலை இயற்றியவர் போதனார்.

**பொருள்**: நாம் உண்ணுமாறு கூறியதை மறுத்து விளையாட்டுக் காட்டி ஓடியவள், இல்லறம் நடத்துவதற்கு உரிய அறிவையும் ஒழுக்கத்தையும் எவ்வாறு உணர்ந்தாளோ?

**விளக்கம்**: சிறுவயதில் தான் பிறந்த வீட்டில், தேனும் பாலும் கலந்த உணவைச் செவிலியர் தர, வேண்டாம் என்று மறுத்தவள் தலைவி. தான் மணந்து கொண்ட கணவனுடன் வறுமையில் வாடும் நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி சிறிதளவும் நினைக்கவில்லை. குடும்பத்தை இனிமையாகவே நடத்துகிறாள். இதனைக்கண்ட செவிலித்தாய் ஏவல்மறுக்கும் சிறுவிளையாட்டி அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல் என்று வியக்கிறாள்.

**11. உயர் தமிழை உயிர் என்று போற்றுமின்கள் இடஞ்சுட்டி பொருள் விளக்கம் தருக.**

**இடம்**: இப்பாடலடி 'புரட்சிக்கவி' எனும் நூலில் இடம் பெற்றுள்ளது. இதனைப் பாடியவர் பாரதிதாசன்.

**பொருள்:** குற்றமில்லாத உயர்ந்த தமிழை உங்களின் உயிராக போற்றுங்கள்.

**விளக்கம்:** தன் மகளைக் காதலித்த குற்றத்திற்காக அரசன் உதாரனனுக்கு மரண தண்டனை விதிக்கிறான். உதாரன் மக்கள் முன் தமிழ் அறிந்ததால் வேந்தன் என்னை அழைத்தான். தமிழ்க்கவி என்று என்னை அவளும் காதலித்தாள். நான் இறப்பதற்கு அஞ்சவில்லை. தமிழே என் ஆவி அழிவதற்குக் காரணம் எனச் சமுதாயம் நினைத்து விடுமோ என்றுதான் அஞ்சுகிறேன். நான் தமிழால் இறக்கவில்லை. அரசனின் அகம்பாவத்தால் இறக்கிறேன். ஆகவே, மக்களே உயர்தமிழை உயிர் என்று போற்றுமின்கள்என்று உதாரன் தன் இறுதிப் பேச்சைப் பேசுகிறான்.

## சிறுவினா- உரைநடை

**1. 'என்னுயிர் தமிழ்மொழி என்பேன்' என்னும் தலைப்பில் நீவிர் கொண்டுள்ள மொழி பற்றினை எழுதுக.**

உலகில் ஆயிரம் ஆயிரம் மொழிகள் தோன்றி மக்களால் பேசப்பட்டு வந்தன.
அவற்றுள் பல மொழிகள் வழக்கொழிந்து மறைந்து போயின.
ஆனால் , தமிழ் இன்றும் இளமையோடும் எழிலோடும் நிலைத்திருக்கிறது.
தமிழ் மொழி பேசுவதற்கும்எழுதுவதற்கும் மட்டுமல்ல, அதையும் தாண்டி வாழ்வதற்கே இலக்கணம் வகுத்துக் கற்பிக்கிறது.
அதனால்தான், தமிழ் நம் உடலில், உணர்வில், உயிரில் கலந்திருக்கிறது.

**2. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? நும் கருத்தை எழுதுக.**
வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லியை உருவாக்குவது மிகவும் எளிது.
ஊர்ப் புறங்களில் கிடைக்கும் வேப்பங்கொட்டை, நொச்சி இலை ,பிரண்டை, கற்றாழை ஆகியவற்றை இடித்து கோமியத்தில் ஊற வைத்து வேதிக் கலப்பில்லா பூச்சிக்கொல்லியை உருவாக்கலாம்.
அவ்வாறு உருவாக்கப்படும் பூச்சிக்கொல்லி மண்வளத்திற்குப் பாதகம் ஏற்படுத்துவதில்லை.
விவசாயத்திற்கு உதவி புரியும் மண்புழு முதலான உயிர்கள் அழிவது முற்றிலும் தடுக்கப்படுகிறது.
மண்ணில் நுண்ணுயிர்ப் பெருக்கம் தடைப்படுவதில்லை.
எனவே, வேதிகலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்கு சாத்தியமே.

**3. தமிழ் இலக்கியங்களில் கல்வி குறித்து நீங்கள் அறிந்த செய்திகளை அட்டவணைப்படுத்துக.**
கல்வி கற்பதற்காக பிரிந்து செல்வதை 'ஓதற்பிரிவு' என்றும், கல்வியின் பொருட்டு ஒருவருக்கு 'பெருமிதம்' தோன்றும் என்றும் தொல்காப்பியம் கூறுகிறது.
'உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும் பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே! என்று புறநானூறு கூறுகிறது.
'கல்வி அழகே அழகு'- நாலடியார் .
'துணையாய் வருவது தூயநற்கல்வி'- திருமந்திரம்
இளமையில் கல் - ஆத்திசூடி

**4. சமணப் பள்ளிகளும் பெண்கல்வியும் - குறிப்பு வரைக.**
கல்வி ,மருந்து, உணவு, அடைக்கலம் ஆகிய நான்கு கொடைகளும் சமண சமயத்தின் தலையாய அறங்கள்.
'பள்ளி' என்ற சொல் சமணமும் பௌத்தமும் நமக்குக் கொடுத்த கொடையாகும்.
வந்தவாசி அருகில் உள்ள வேடல் என்னும் ஊரில் இருந்த சமணப் பள்ளியில் பெண் சமண ஆசிரியர் ஒருவர் 500 மாணவர்களுக்குக் கல்வி கற்பித்துள்ளார்.
பட்டினிக்குரத்தி என்னும் சமணப்பெண் ஆசிரியர் விளாப்பாக்கத்தில் சமணப்பள்ளி ஒன்றை நிறுவி இருந்தார்.
பெண்களுக்கெனத் தனியாகக் கல்வி கற்பிக்கும் சமணப்பள்ளிகள் பெண் பள்ளிகள் என்று அழைக்கப்பட்டன.

**5. ஆனந்தரங்கர் ஒரு வரலாற்று ஆசிரியர் என்பதை பாடப்பகுதி வழி எடுத்துக்காட்டுக.**
ஆனந்தரங்கர் தமது நாட்குறிப்பில் நிகழ்வு இடம், நாள், நேரம், ஆகியவற்றைத் தவறாது குறிப்பிடுவார்.
தேவனாம்பட்டணத்தைக் கைப்பற்றுவதற்காக ஆங்கிலேயருடன் பிரெஞ்சு அரசு நடத்திய படையெடுப்புகள்.
புகழ்பெற்ற ஆம்பூர் போர் பற்றிய செய்திகள்.
தஞ்சைக் கோட்டையின் மீது நடத்தப்பட்ட முற்றுகை.
இவை போன்ற பல்வேறு வரலாற்று நிகழ்வுகளை ஆனந்தரங்கர் தம் நாட்குறிப்பில் விளக்கி கூறியிருப்பதால் அவரை வரலாற்று ஆசிரியர் எனலாம்.

**6. ஃபிரஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவீர் அறிவன யாவை?**

### ஃபிரஸ்கோ ஓவியங்கள்:

ஃபிரஸ்கோ என்ற இத்தாலிய சொல்லுக்குப் 'புதுமை' என்பது பொருள். சுண்ணாம்பு காரைப்பூச்சுமீது அதன் ஈரம் காயும்முன் வரையப்படும் ஓவியமே ஃபிரஸ்கோ ஓவியம்.இவ்வகை ஓவியங்களை அஜந்தா, எல்லோரா, சித்தன்னவாசல் போன்ற இடங்களில் காணலாம்.

**கற்றளிக் கோவில்கள்:**
செங்கற்களை ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கி கட்டுவது போல கருங்கற்களை அடுக்கி கட்டுவதற்குக் கற்றளி என்று பெயர்.ஏழாம் நூற்றாண்டில் இரண்டாம் நரசிம்மவர்மன் என்னும் பல்லவ மன்னன் உருவாக்கிய வடிவம் இது.தஞ்சைப் பெரிய கோவில், காஞ்சிபுரம் கைலாசநாதர் கோவில், பனைமலைக் கோவில் ஆகியன இதற்கு எடுத்துக்காட்டாக கூறலாம்.

**7. ஜீவாவின் பேச்சுநடை குறித்து சுந்தரராமசாமி கூறுவன யாவை?**

ஜீவாவின் பேச்சுநடையை அவர் பெற்ற வரம் என்றுதான் சொல்ல வேண்டும்.
பேச்சுக்கலையை விளக்கும் பாடப்புத்தகங்கள் எத்தனையோ விதிகள் கூறும்.
அவற்றையெல்லாம் காலடியில் போட்டு மிதித்தவர் ஜீவா.
அவருடைய பாணி இரவல்பாணி அல்ல; கற்று அறிந்ததும் அல்ல.
தமிழ்நாட்டு மக்களின் தரத்தையும், பழக்க வழக்கங்களையும் நம்பிக்கைகளையும் நன்றாக தெரிந்து கொண்டு, அதனோடு கற்பனையும் கலந்து, அவரே அமைத்துக் கொண்ட பேச்சுப்பாணி அது என்று சுந்தர ராமசாமி கூறுகிறார்.

**.8. இயற்கையுடன் உரையாடல் ஒன்றை கற்பனையாக பத்து வரிகளில் எழுதுக.**
இருந்து பேச நேரமின்றி படபடவென பறந்தோடும் தேனியே!
உனக்குக் கூடு கட்டிட பயமே இல்லையா?
காடு மலையிலும் கிடுகிடு பள்ளத்திலும் தேனடை வீட்டைக் கட்டுகிறாய்.
மலரும் மலர்களின் திசையை உனக்கு சொல்வது யார்?
மனிதரைப் போல் நீ சத்தான பானங்கள் ஏதும் குடிப்பதில்லை.
ஆனாலும், சுறுசுறுப்பு மட்டும் உன்னிடத்தில் குறைவதில்லை அது எப்படி?

**9. 'தாமஸீகம்' என்றால் என்ன?**

தாமஸீகம் என்பதை 'மெடீரியலிஸம்' என்கிறோம்.
உலகின் உயிரினத்தை ஒரு பொருளாக பார்க்கும் மனநிலையே தாமஸீகமாகும்.
இன்றைய நாகரிக உலகில் ஒரு தோட்டத்தை பராமரிக்கும் பொறுப்பு ஒரு வேலையாளிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கும்.
அவன் கையில் உள்ள செப்பினுள் வழக்கம் போல் வருவதும் போவதும் தான் மலர்களின் வேலை.
மலரின் பயன்பாட்டிற்கு அப்பால் அதன் சிறப்பை உயர்வை எண்ணாமல் அதை ஒரு பொருளாக மட்டுமே தோட்டக்காரன் கருதுகிறான் இதையே தாமஸீகம் என்று தாகூர் குறிப்பிடுகின்றார்.

## நெடுவினாக்கள்

**1.நீங்கள் மொழியை வெளிப்படுத்தும் நிலையில் பேச்சுமொழியையும் எழுத்துமொழியையும் எவ்வாறு உணர்கிறீர்கள் என்பதை விவரிக்க.**

எழுத்துமொழியைக் காட்டிலும் பேச்சுமொழி உணர்ச்சிக்கு மிக அருகில் இருக்கிறது.

கவிஞனுடைய கவிதையின் மொழி அதிக வெளிப்பாட்டுச் சக்தி கொண்டதாக மாறிவிடுகிறது.

எழுதுவதை மட்டும் தான் மனிதனின் கை செய்கிறது. முகத்தில் இருக்கும் வாய் உடம்பில் இருக்கும் கையைக் காட்டிலும் உணர்ச்சி வெளிப்பாட்டுச் சக்தி கொண்டது.

எழுத்து மொழியில் பேப்சைக் கேட்க எதிராளி என்கிற ஒருவன் கிடையாது.
பேச்சு என்பது தன்னைத் திறந்து கொள்கிற ஒரு செயல்பாடு. பேச்சு என்பது மொழியில் நீந்துவது.

இதை உணர்ந்த கவிஞர்கள் சிலர் தங்களுடைய கவிதைகளை எதிரில் இருக்கும் வாசகனுடன் பேசுவது போல அமைக்கின்றனர் இதையே அவர்கள் நேரடிமொழி எனக் கருதுகின்றனர்.

**2. 'யானை டாக்டர்' கதை வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்பு ஆகியவை குறித்து நீவிர் அறிந்தவற்றை த் தொகுத்து எழுதுக.**

**முன்னுரை:**

யானை டாக்டர் என்று அழைக்கப்படுபவர் டாக்டர்.வி. கிருஷ்ணமூர்த்தி. யானைகளுக்காக தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். இக்கதையின் **வாயிலாக இயற்கை உயிரினப் பாதுகாப்புக் குறித்துக்** கீழ்க்காண்போம்

**காட்டின் மூலவர்:**

காட்டின் வளத்திற்கு அடிப்படையாக விளங்கும் யானைகளைக் காட்டின் மூலவர் என்பர்.
மனிதர்கள் அல்லாத உயிரினங்களில் தன்னை அறியும் ஆற்றலையும் மனிதர்களின் குணங்களில் பலவற்றைக் கொண்டது யானை.

**இயற்கை பாதுகாப்பு:**

இக்காலத்தில் வாழும் மனிதன் பல உயிரினங்களுக்கு அரணாக இருக்கும் இயற்கைக்கும் பிற உயிரினங்களுக்கும் ஊறு விளைவிக்கிறான்.
சுற்றுலா என்ற பெயரில் அடர்ந்த மரங்களும் வனவிலங்குகளும் நிறைந்த காட்டுக்குள் சென்று குடித்துவிட்டு வெறியுடன் மரத்தின் மீது வீசி எறியும் மதுக் குப்பிகள் யானைகளுக்கு மிகுந்த ஆபத்தானவை.
ஆறறிவு படைத்த மனிதன் மனம் மாற வேண்டும். இயற்கையை போற்றிப் பாதுகாக்க வேண்டும்.

**உயிரினப் பாதுகாப்பு:**

யானை டாக்டர் போன்ற கதைகளைப் படித்த பின்பாவது மனிதன் மரங்களை வெட்டுவது, வனவிலங்குகளின் குடியிருப்புகளை ஆக்கிரமிப்பது, அவற்றின் வாழ்விடங்களை மாசுபடுத்துவது போன்ற செயல்களை கைவிட்டாலே உயிரினங்கள் பாதுகாப்பாய் வளரும்.

முடிவுரை:

இயற்கையைப் பாதுகாப்பதில் வன உயிரிகளின் பண்பு பாராட்டத்தக்கது. இது போன்ற கதைகளின் வாயிலாக மனிதன் மரங்களை வெட்டுவது, வன விலங்குகளின் வாழ்விடங்களை ஆக்கிரமிப்பு செய்வது, இயற்கையை மாசுபடுத்துவது முதலிய செயல்களைக் கைவிட வேண்டும் என்பதனை உணர்ந்து கொண்டோம்.

**3. இயற்கையோடு இயைந்து வாழ்ந்த தமிழர்களின் இருப்பிடப் பெயர்களும் இயற்கையோடு இயைந்தே இருந்தன கூற்றினை மெய்ப்பிக்க.**

மலை மனித சமூகத்தின் ஆதி நிலம் ஆகும். மலைநில மனிதர்கள் என 'கமில் சுவலபில்' அழைத்த தமிழரின் பண்டைய பதிவுகள் கடவுளையும் மலையையும் வாழ்வில் தொடர்பு படுத்தவனாக உள்ளன.
மனித சமூகத்தின் ஆதி நிலமான மலை தமிழ் இலக்கியங்களில் குறிஞ்சி என குறிக்கப்படுகிறது
.

**இயற்கையோடு இயைந்த வாழ்வு:**

பழங்குடியினர் ஓடும் நீரையே குடிநீராகப் பயன்படுத்தினர்.
மலை உச்சியில் அமைந்த பழங்குடியினத் தலைவரின் வீடு வாழ்விட வடிவமைப்பு வாழ்வியலில் உயரமான இடங்கள் செலுத்தும் தாக்கத்தை காட்டுகின்றன.

**சொல் வழக்கு:**

தென்னிந்திய மலைவாழ் மக்களிடையே மலை, மலா, மலே என்னும் சொற்கள் வழங்குகின்றன. மலை, குன்று என்னும் சொல்லாட்சி மலை சார்ந்த மக்களிடம் வழங்குவது சிறப்பாகும்.
வடமேற்கு நாடுகளில் கண்டறியப்பட்டுள்ள சான்றுகள் பாகிஸ்தான் ஆப்கானிஸ்தான் நெடுமலைகளோடு பொருந்தி போகின்றன.

**4. ‘அடக்கமுடைமை’ ஒருவரை வாழ்வினில் உயர்த்தும் இக்கூற்றை முப்பால் வழி விளக்குக**.

நேர்வழி மாறாது அடக்கமாய் இருப்பவனின் உயர்வு மலையின் மாண்பைக் காட்டிலும் பெரியது.

ஒருவர் எதைக்காக்காவிட்டாலும் நாவைக் காக்க வேண்டும் அவ்வாறு காக்காவிட்டால் சொல் குற்றத்தில் சிக்கித் துன்பப்படுவர்.

தீயினால் சுட்ட புண்ணால் உடலில் வடு உண்டானாலும் உள்ளே ஆறிவிடும். நாவினால் சுட்ட புண்ணால் உடலின் புறத்தே வடு உண்டாகாவிட்டாலும் உள்ளே ஆறாது.

**5. தலைவியின் இல்லறப் பாங்கினைப் பற்றி செவிலித்தாய் நற்றாயிடம் வியந்து கூறுவன யாவை?**

நம் வீட்டில் தேனும் பாலும் கலந்த இனிய உணவைப் பொற்கலத்தில் இட்டு செவிலியர் ஏந்தி வருவர்.

நம் மகளை உண்ண வைக்க பூச்சுற்றிய கோல் வைத்திருப்பர்.

வீட்டின் முற்றத்தில் இதை உண்பாயாக எனச் செல்லமாக அக்கோலால் அடிப்பர். ஆனால் நம் மகளோ உண்ணேன் எனப் பொற்சிலம்பு ஒலிக்க ஓடுவாள். செவிலியர் நடை தளர்ந்து நிற்பர்.

இப்படிப்பட்ட விளையாட்டுப்பெண் கணவன் வீட்டில் அறிவையும் இல்லற முறையையும் கற்றுள்ளாள்.

தன் கணவன் வீடு வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினை நினைத்துப் பாராள்.

ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பது போல ஒரே பொழுது உண்ணும் வன்மை பெற்றுள்ளாள்.

**6. பாரதியின் இதழாளர் முகம் குறித்து நீங்கள் அறிவன யாவை?**

சக்கரவர்த்தினி, இந்தியா, பாலபாரதி, யங் இந்தியா, விஜயா, சூர்யோதயம், கர்மயோகி எனப் பல இதழ்களில் பணியாற்றியுள்ளார்.

கருத்துப்படங்களைத் தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாக அறிமுகப்படுத்தியவர். இந்தியா, விஜயா இதழ்களில் கருத்துப் படங்களை வெளியிட்டவர்.

கருத்துப்படங்களை மட்டுமே கொண்ட சித்திராவளி என்னும் இதழை நடத்த விரும்பினார்.

‘சக்கரவர்த்தினி’ என்னும் தம் இதழில் குறள் வெண்பாவை எழுதி பெண் விடுதலைக்குப் பாடுபட்டார்.

புரட்சியையும் விடுதலையையும் குறிக்க இந்தியா இதழைச் சிவப்பு வண்ணத்தில் வெளியிட்டார்.

தமிழ் இதழ்களில் தமிழ்மாதம், ஆண்டு, நாள் ஆகியவற்றை முதன்முதலாக குறித்தவர்.

தமிழில் தலைப்பிடுவதற்கும் இவரே முன்னோடி. தலைப்பிடலை ‘மகுடமிடல்’ என்றே கூறினார்.

**7. தாம் வாழ்ந்த காலகட்டத்தின் நாகரிகப் புதையலாக நாட்குறிப்பைப் பயன்படுத்தியவர் ஆனந்தரங்கர் என்பதை நிறுவுக**.

ஆனந்தரங்கரின் நாட்குறிப்பு 18ஆம் நூற்றாண்டின் தமிழ்ச் சமூகத்தைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைந்துள்ளது.

பண்பாடு, சமயம், சாதி, நீதி, நம்பிக்கை முதலான பல்வேறு கூறுகள் அடங்கிய நிகழ்வுகளைப் பதிவு செய்துள்ளார்.

நீதி வழங்குதல், தண்டனை வழங்குதல் ,காதறுத்தல், சாட்டையடி, கிடங்கில் போடுதல் போன்ற பதிவுகள் இவரது நாட்குறிப்பில் உண்டு.

கப்பல் வந்தவுடன் பீரங்கி முழங்குதல் வழக்கத்தில் இருந்தது.

எட்டு மாற்றுக்குக் குறைவான நாணயங்களை வைத்திருப்பது தண்டனைக்குரிய குற்றம்.

பிறை வராகன், சென்னைப் பட்டணத்து நட்சத்திர வராகன், வட்ட வராகன், பரங்கிப்பேட்டை வராகன், ஆரணி வராகன் எனப் பல்வேறு விதமான வராகன்களை ஆனந்தரங்கர் குறிப்பிட்டுள்ளார்.



கணக்கு வரவுசெலவு பட்டியல் என நாட்குறிப்பின் பெரும்பகுதி வணிகச் செய்திகளையே விவரித்துள்ளது.

**8. வாழ்வின் உயர்வுக்கு உறுதுணையாக நீங்கள் கருதும் குறட்பாக்கள் சிலவற்றை விளக்கி கட்டுரையாக்குக**.

**வாழ்வின் உயர்வுக்கு உறுதுணை:**

நாம் நம் வாழ்வில் உயர்ந்த இடத்தைப் பெற நமக்கு உறுதுணையாக இருப்பது திருக்குறள்.

ஏனெனில் நாம் செய்யக்கூடிய அறக்கருத்துகளை நமக்கு விதித்தும், செய்யக்கூடாத அறம் இல்லாத கருத்துக்களை விலக்கியும் நம்மை வழி நடத்துகிறது.

**எண்ணியதை அடைதல்:**

எப்போதும் எண்ணியதையே எண்ணிக் கொண்டிருந்தால் எண்ணியதை அடைதல் எளியதே.

**குறிப்பறியும் துணை:**

முகக்குறிப்பில் அக குறிப்பை அறிபவரை என்ன பொறுப்பைக் கொடுத்தாவது துணையாக்கிக் கொள்ள வேண்டும்.

**பாதுகாப்பு:**

வீரம், மானம், முன்னோர் வழியில் நடத்தல், நம்பிக்கைக்குரியவர் ஆதல் ஆகிய நான்கும் படைக்கு மட்டுமல்ல நம் வாழ்க்கைக்கும் பாதுகாப்பாக அமையும்.

**மருந்து:**

உண்டதும், செரித்ததும் அறிந்து உண்டால் மருந்து என ஒன்று நமக்குத் தேவையில்லை.

**9. சிம்பொனித் தமிழரும் ஆஸ்கர் தமிழரும் இசைத் தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்து எழுதுக**.

**சிம்பொனித் தமிழர்:**

சிம்பொனித் தமிழர் என்று அழைக்கப்படுபவர் இசைஞானி இளையராஜா. தேனி மாவட்டம் பண்ணைப்புரத்தைச் சேர்ந்தவர்.

அன்னக்கிளி படத்தில் அறிமுகமானார்.

எப்படிப் பெயரிடுவேன்,'காற்றைத் தவிர ஏதுமில்லை' எனும் இசைத் தொகுப்புகள் சிறப்பு வாய்ந்தவை.

'பத்மபூஷன் விருது' 'சிறந்த இசையமைப்பாளருக்கான தேசிய விருது' 'கலைமாமணி விருது''லதா மங்கேஷ்கர் விருது' போன்ற விருதுகளை பெற்றுள்ளார்.

'பால்நிலாப் பாதை''வெட்டவெளிதனில் கொட்டிக் கிடக்குது' உள்ளிட்ட பல நூல்களை எழுதியுள்ளார்.

மாணிக்கவாசகரின் திருவாசகத்துக்கு இசை வடிவம் தந்துள்ளார். 'பஞ்சமுகி' என்னும் இராகத்தை உருவாக்கியுள்ளார்.

**ஆஸ்கர் தமிழர்:**

ஆஸ்கர் தமிழர் ஏ. ஆர் .இரகுமான் 2009 இல் சிறந்த திரைப்பட பின்னணி இசைமற்றும் சிறந்த திரையிசைப் பாடலுக்காக என இரண்டு ஆஸ்கர் விருதுகள் பெற்றார்

.

1992 இல் ரோஜா திரைப்படத்தின் மூலம் தம் பயணத்தைத் தொடங்கினார்.

இவர் இசையமைத்த 'வந்தே மாதரம்''ஜன கண மன' என்னும் இசைத் தொகுதிகள் நாட்டுப்பற்றை மிளிரச் செய்தன.

'பத்மபூஷன் விருது''கலைமாமணி விருது''லதா மங்கேஷ்கர் விருது''தேசிய இசை விருது' போன்ற விருதுகளை பெற்றவர்.

ஒரு பாடலுக்காக மெட்டை உருவாக்கும் முன் தாளத்தை உருவாக்குபவர்.

'ஸ்லம்டாக் மில்லியனர்' என்ற திரைப்பட இசைக்காக 'கோல்டன் குளோப் 'மற்றும் 'கிராமி விருது' பெற்றவர்.

**10. சுந்தர ராமசாமியின் காற்றில் கலந்த பேரோசை என்னும் தலைப்பு ஜீவாவின் வாழ்க்கைக்கு எங்ஙனம் பொருந்தும் என்பதை விளக்குக**.

ஜீவா மிகச்சிறந்த மேடைப் பேச்சாளர். தம் கருத்துக்களை நயமாகவும் கேட்போர் விரும்பும் வண்ணமும் பேசுபவர்.

மனித குலத்திற்குத் தலைமை ஏற்று , அதி உன்னதமான எதிர்காலத்திற்கு அழைத்துச் செல்ல வேண்டும் என்பது அவர் கனவு.

பேச்சுக்கலை அவர் பெற்ற வரம் அவர் பேசுகையில் வெளிப்படும் உத்திகளும் பேச்சை அமைக்கும் அழகும் வெகு நூதனமாகவும் நளினமாகவும் இருக்கும்.

அவரது பாணி இரவல்பாணி அல்ல. கற்று அறிந்ததும் அல்ல. விஷயத்தை அணுகி கற்பனையும் கலந்து அமைத்துக் கொண்ட பேச்சுப் பாணி.

என் வாழ்வு என் கைகளில் என்று நம்பியவர். கடவுளின் முன்னேற்பாடுகளை முடிந்த மட்டும் அவர் தகர்த்து எறிந்து விட்டார்.

நீரில் விழுந்த கிளை மலைக்குச் சென்று விட்டது. எனினும் மரணம் இன்னும் கடவுளுக்கு தான் சொந்தம். ஜீவாவின் பேரோசை காற்றில் கலந்து விட்டது.

**11.வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துக்களை விளக்குக**.

**முன்னுரை:**

தமிழ் மண்ணுக்கே உரித்தான ஜல்லிக்கட்டை மையமாகக் கொண்டு சி.சு.செல்லப்பா எழுதிய குறும்புதினமே வாடிவாசல். இக்குறும்புதினம் எனக்கு உணர்த்திய கருத்துக்களை இங்கு எழுதுகிறேன்.

**உருவுகண்டு எள்ளாமை வேண்டும்:**

காரி வாடிவாசல் பக்கம் வருவதாக பையன் கத்தினான் காரி என்னும் காளையின் உருவத்தைக் கண்டதும் மக்கள் மனதில் கொண்டுள்ள முன்தீர்மானங்களை வாடிவாசல் எடுத்துரைக்கிறது.

'வாடிபுரம் காளை!' 'கருப்புப் பிசாசு'!

'கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்'!

பய செத்தான்!

'செல்லாயி வாடியிலே அவனுக்கு முடிவு போட்டிருக்கு!'

என்று மக்கள் கூறுகின்றனர். ஆனால், கதையின் முடிவு மக்கள் கருத்துக்களுக்கு எதிராக இருக்கிறது .நம் வாழ்விலும்.

உருவத்தை மட்டும் வைத்து
நாம் தீர்மானிக்கும் கருத்துக்கள்
தவறானவையாகவும் ஆகக் கூடும்.
என்பதை இக்கதை உணர்த்தியது.

**வீரத்தைப் போற்றும் சமூகம்:**

காரி என்ற காளைக்கு அங்கு நடப்பது போட்டி என்றே தெரியாது. தன்னை எதிர்ப்பவரைத் தாக்கும் பயிற்சியை அது பெற்றிருக்கிறது, அதை பார்த்தவர்கள்

"ராஜாளி மாதிரி வந்து நிக்குது பாரு!"

"நின்னுக்குத்தி காளைன்னா இதுதான்!"

என்று கூறுகிறார்கள். காளைக்கும் காளையருக்குமான இப்போட்டியில் சில நேரம் உயிரிழப்புகள் ஏற்பட்டாலும் கூட வீரத்தையே சமூகம் கொண்டாடும் என்பதை இது உணர்த்துகிறது.

**விளையாட்டை விளையாட்டாய் பார்:**

பிச்சி காளையின் எதிர் நின்று அதை நோக்குகின்றபோது அப்பன் ஆசைக்கும் மட்டுமின்றி, உசிருக்கே உலை வைத்த காரியின் கொம்பில் இன்னும் அப்பன் ரத்தம் வழிந்து கொண்டிருப்பது போன்ற பிரம்மையோடு நோக்குகிறான். ஆனாலும், அக்காளையின் உயிரைப்பறிக்க வேண்டும் என்று அவன் எண்ணவில்லை. தன் வலிமையைக் காட்டி முறைப்படி அடக்கி வெல்கிறான். இது விளையாட்டை விளையாட்டாக கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வை ஒவ்வொருவருக்கும் ஏற்படுத்துகிறது.

**பயிற்சியும் முயற்சியும்:**

பிச்சி, காரியை அடக்குவதற்கு முறையாகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்டான். அதன்படி 'மருதா' என்று தன் தோழனை உஷார்படுத்துகிறான். லங்கோட்டை அவிழ்ந்து விடாதவாறு இறுக்கி கட்டிக்கொள்கிறான். இரு கைகளையும் மண்ணில் தோய்த்து சொரசொரப்பாக்கி கொள்கிறான். காளையின் திமிலில் இடது கையைப்போட்டு, அதன் கழுத்தில் அணைத்துக் கொள்கிறான். பிச்சி பாதுகாப்பாகவும் வலிமையாகவும் போராடி வெற்றி பெறுகிறான். இதன் மூலம்

ஒரு செயலில் வெற்றிபெற
முறையானப் பயிற்சியும்
சிறந்த முயற்சியும் அவசியம் என்பதை நான் உணர்ந்து கொண்டேன்.

**முடிவுரை:**

உருவம் கொண்டு ஒருவரை மதிப்பிடக் கூடாது. விளையாட்டை விளையாட்டுப் பண்புகளோடு காண வேண்டும்,வீரத்தையே சமூகம் போற்றும்,பயிற்சியும் முயற்சியுமே வெற்றிக்கு வழி, ஆகிய கருத்துக்களை வாடிவாசல் குறும்புதினம் நமக்கு உணர்த்துகிறது.